
# மெய்யியல் நோக்கு

## PHILOSOPHICAL JOURNAL

### உலகம் உன் கையில்...



உண்மையை அறிந்துணர

மானிடா!
உலகம் உன் கையில்
அறிந்து கொள்.
ஆக்கவும், அழிக்கவும்
கட்டவும், உடைக்கவும்
படைக்கவும், தகர்க்கவும்
அறிந்தவன் நீ!
எது உன் தெரிவு?

உலகம் உன் கையில்...

விழி: 03 பார்வை: 01 ஐப்பசி, 2002

## உள்ளடக்கம்

1) **ஞானத்துயில்** (mysticism) **- ஓர் ஆன்ம அனுபவம்**
பற்றிக் ஞானப்பிரகாசம், அ.ம.தி., B. Th. (Rome)
Mysticism: A Spiritual Experience
**Patrick Gnanapragasam**, O.M.I., B.Th. (Rome)

2) **கார்ல் றொஜேர்ஸின்** – பாதிப்புற்றவர் மைய சிகிச்சை முறை
மோ. ஷோபன் றூபஸ், B. Ph. (Rome)
Carl Rogers' Client Centred Therapy
**M. Shoban Rufus**, B.Ph. (Rome)

3) **முழுமையாக்கலின் ஏக்கத்தின் தாக்கம்**
அ. அ. அமலராஜ், B. Ph. (Rome)
The Role of Anxiety in Self - Actualization
**A. A. Amalaraj**, B.Ph. (Rome)

4) **"வேடங்களையெல்லாம் களைந்து..."**
**'மனித ஆள்' பற்றிய எண்ணக்கருவிற்கு ஓர் அறிமுகம்**
யோ. போல் றொகான், L. Ph (Rome)
"Beyond all Facades..."
An Introduction to the Concept of 'Human Person'
**J. Paul Rohan**, L. Ph. (Rome)

5) **பகுப்பாய்வு மெய்யியலாளர் பார்வையில் மெய்யியல்**
லூ. மேசி சுஜந்தினி, (இளங்கலை மாணவி)
'Philosophy' - As Viewed by the Analytic Philosophers
**L. Mercy Sujanthini** (Under graduate)

6) **பொருண்மிய மனிதன்** (Homo Economicus) என்ற
கருத்தியல் பின்னணியில் நவீனத்துவம் பற்றிய சில குறிப்புகள்
சா. பீ. கிருபானந்தன், M. M. R. Sc. (Leuven)
Some Notes On Modernity From The Perspective Of The Ideology Of Homo Economicus
**S. F. Kirupananthan**, M. M. R. Sc. (Leuven)

# மெய்யியல் நோக்கு

## A PHILOSOPHICAL JOURNAL

(வருடம் இருமுறை)

(Bi – annual)

விழி: 03 பார்வை: 01 ஐப்பசி, 2002

Publishers:
Faculty of Philosophy
Xavier's Seminary
Columbuthurai
Jaffna
Sri Lanka.

வெளியீடு:
மெய்யியல் துறை
சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

"உண்மையை அறிந்துணர"

கல்வியாண்டு Academic Year } 2002 - 2003

பருவம் Semester } 01

ஐப்பசி – மாசி

October - February

2002 - 2003

தொகுப்பாசிரியரிடமிருந்து...

# புதிய சூழ்நிலைகள்...புதிய தேவைகள்...

மனித வாழ்க்கை பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது. பல்வகைப்பட்ட மானிட வாழ்வின் பரிமாணங்கள் பல்வேறு தேவைகளை உருவாக்குகின்றன. இவைகள் அனைத்தும் மானிடத்தேவைகளாக உருவாகுகின்றன. இவற்றில் சிலவற்றை அடிப்படைத்தேவைகள் என்றும் ஏனையவற்றை ஆடம்பரத் தேவைகள் என்றும் பொருளாதார ரீதியாகப் பகுத்துப்பார்க்கிறார்கள். ஆனாலும் தேவைகள் என்ற ரீதியில் இவையனைத்தும் மானிடத்தின் தேவைகளே. மத்திய கால அரசியலறிஞர் மாக்கியவெல்லி கூறுவதுபோல "தேவைகளே மனிதனை உருவாக்கு கின்றன; தேவைகளே மனிதனை பூரணப்படுத்துகின்றன; மனிதத் தேவைகள் பற்றிய உணர்வை உசுப்பி விடுதலே இறுதியான அதே வேளை மகச்சிறந்த ஆயுதமாகும்."

அரசியல் ரீதியாக ஈழத்தமிழர்களாகிய நாம் புதிய சூழ்நிலைக்குள் பிரவேசிக்கின்ற காலம் இது. பல ஆண்டுகால போராட்டத்தின் விளைவாக பெற்றுக்கொண்ட பேரம் பேசும் பலத்தை வைத்துக்கொண்டு சமாதான வழியிலே கண்ணியத்தோடு கால்பதித்திருக்கின்ற காலமிது. விவிலியத்திலே சபை உரையாளர் என்கின்ற எபிரேய ஞானி கூறுகிறார்; "உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு காலமுண்டு... அழுகைக்கு ஒருகாலம்; சிரிப்புக்கு ஒரு காலம்...போருக்கு ஒரு காலம்; அமைதிக்கு ஒரு காலம்." ஆக, (சபைஉரையாளர் 3:4,8) உலகத்தின் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் மானிடத்தின் தேவைகளாலேயே உருவாகுகின்றன.

நமது அமைதிக்குரிய இக்கால கட்டத்திலே எல்லோரினதும் அடிப்படை எதிர்பார்ப்புக்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற ஒரு சூழல் எம்மத்தியில் தோற்றுவிக்கப்படவேண்டியது அவசியமான தேவையாகிறது. ஈழத்தமிழர்களாகிய நாம் நீண்ட காலமாக வாழ்வா, சாவா என்ற இரு துருவங்களுக்கிடையில் தத்தளித்துக்கொண்டு வாழ்ந்த வாழ்வு இனிவரும் காலங்களில் நாம் பெறவிருக்கின்ற மனித மாண்பு நிறைந்த வாழ்வினால் மட்டுமே அர்த்தம் பெறும்.

உணவு, உடை, உறையுள், பொழுதுபோக்கு, மருத்துவ வசதிகள், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அடிப்படைத் தேவைகளோடு மனித வாழ்வுக்கு இன்றியமையாத ஏனைய தேவைகளும் இனங்காணப்பட்டு பூர்த்தி

செய்யப்பட வேண்டும். ஓர் இனத்திற்கு உயிரோட்டம் கொடுப்பது அதனது கலாச்சாரமாகும். ஓர் இனத்தின் கலாச்சாரம் அவ்வினத்தினது மனோநிலை, வாழ்க்கை முறை, தொடர்பு நிலைகள் போன்றவற்றின் ஒட்டுமொத்த வடிவமே. எனவே மானிட அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த படியாக அந்தமானிடம் சார்ந்திருக்கின்ற கலாச்சாரத் தேவைகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

எனவே இப்பொழுது நமது பிரதேசத்தில் தோன்றியிருக்கின்ற புதிய சூழ்நிலையில் நமது கலாச்சாரம் பற்றிய உணர்வும் பொறுப்பும் மீள வலியுறுத்தப்படவேண்டிய தேவை தோன்றியுள்ளது. பாரிய காட்டாறு போலப்பாய்ந்து வந்து கொண்டிருக்கின்ற பூகோளமயமாக்கல் தத்துவத்திற்கு நாம் முகம் கொடுத்து, எமது இனம், மொழி, கலாச்சாரம் இவற்றைப்பேணுவதற்கு மேற்கூறப்பட்ட 'கலாச்சார அர்ப்பணிப்பு' மிகவும் இன்றியமையாதது.

* * *

நீண்ட கால இடைவெளிக்குப்பிறகு 'மெய்யியல் நோக்கு' சஞ்சிகை உங்கள் கைகளில் தவழ்கிறது. கடந்த காலத்தில் எமது நாட்டில் தோன்றிய அசாதாரண சூழ்நிலைகள் 'மெய்யியல் நோக்கு' தொடர்ந்து வெளிவருவதை அனுமதிக்கவில்லை. 'உண்மையை அறிந்துணர' என்ற விருது வாக்கோடு மானிட வாழ்வின் எல்லாப் பரிமாணங்களுக்கும் ஒளிபாய்ச்சி, மானிட வாழ்வின் எல்லாத்தேவைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற ஆக்கங்களை இவ்விதழும் தாங்கி வருகின்றது. மெய்யியல் எப்பொழுதுமே மனிதனை ஒரு முழுமையாகப் பார்க்கின்ற ஓர் அறிவியலாகும். இந்தப் பின்னணியில் 'மெய்யியல் நோக்கு' தொடர்ந்தும் மானிட வாழ்வின் அர்த்தத்ததைத் தேடுவதற்கு வேண்டிய வழியைக் காட்டி வெளிவரும். 'மெய்யியல் நோக்கு' தொடர்ந்தும் சிறப்புற வெளிவர உங்களது ஆக்கங்கள், கருத்துக்கள், விமர்சனங்கள் பேருதவியாக அமையும்.

– யோ. போல் றொகான்

※※※

## New situations...New demands...

There are many dimensions of human life. These multi-faceted dimensions of life create many needs. These are identified as human needs, of

which some are essential needs. Machiavelli says that necessities create and complement humanity; necessity is the last and the best of all weapons.

Politically, we, the Tamils of Sri Lanka are entering into a new phase. The negotiating power that we achieved as the result of many years of liberation struggle has made us enter into the peace processes with dignity. As the Holy Scripture says, we have time for everything; a time to weep and a time to laugh; a time for war and a time for peace. (Ecclesiastes 3:4,8)

Culture is the basic element that gives life to a particular nation, because it expresses its mentality, ways of living and its dealing in and out. Therefore with the essential needs the cultural needs also are to be emphasized.

It is necessary that we emphasize the cultural awareness among our people in the midst of the present new situation. Then only we can face the threats of globalization which invades on us to destroy our language, national identity and our culture itself. Therefore it is necessary that we re-dedicate ourselves to our culture.

'Mei-Iyal-Nokku' (the philosophical journal) comes to you with the same motivation of shedding light on the truth and on the ways of finding the meaning of human life. We expect your continued support to enhance its quality.

- J. Paul Rohan

****

"தூக்கணாங்குருவி கூடு கட்டுகிறது. இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளானாலும் குருவி கூடுதான் கட்டும். 'லிப்ட்' போட்டு வீடுகட்டப் போவதில்லை. அதனறிவு அவ்வளவுதான். ஆனால் குகையில் வாழ்ந்த மனிதன் விண்வெளியில் வீடு கட்டுமளவிற்கு வளர்ந்திருக்கின்றான். காரணம் குருவிக்கு இருப்பது அறிவு; மனிதனுக்கு இருப்பது பகுத்தறிவு"

**பெரியார்தாசன்**

# ஞானத்துயில் (MYSTICISM)
## ஓர் ஆன்ம அனுபவம்

— பற்றிக் ஞானப்பிரகாசம், அ. ம. தி.

மானிட வாழ்வில் ஏற்படும் உடல், உள வளர்ச்சியின் மாற்றங்கள் போன்று ஆன்மீக வாழ்விலும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. உடல் ரீதியாக ஒரு பச்சிளங்குழந்தைக்குத் தாயும், தாயூட்டும் பாலும், அரவணைப்பும், அக்கறையும் அடிப்படைத் தேவைகள். விளையாடத் தொடங்கும் சிறு பிள்ளைக்கு விளையாட்டு உபகரணங்களும், சுதந்திர நடமாட்டமும், புதியனவற்றைக் காணும் ஆவலும் அடிப்படைத் தேவைகள். இளமைப் பருவத்தினருக்கு தமது சக மாணவ மாணவிகளோடு அல்லது தம் தோழர் தோழியரோடு உறவுகளை வளர்ப்பதும், புறநிலைக் கட்டுப்பாடின்றி சுயமாகச் செயற்பட விரும்புவதும் அடிப்படைத் தேவைகள். இல்லறத்தில் ஈடுபடுவோருக்கு தமது எதிர்காலப் பாதுகாப்பிற்கான பொருள் வளங்களைத் திரட்டுவதும் தமது எதிர்காலச் சந்ததியினரை நன்னிலையில் வைக்கும் ஏக்கமும் எதிர்பார்ப்பும் அடிப்படைத் தேவைகள். நரை திரையாகி வயது முதிர்ந்து பந்த பாசங்கள் தளர்ந்து, உலகப் பற்றுகள் அகன்று, இறைப்பற்றோடு ஞானத்தைத் தேடுவது முதிர்ந்த நிலையினரின் அடிப்படைத் தேவை. அவ்வாறே ஆன்ம வாழ்விலும் பல படிகள் உள்ளன.

### ஆன்ம வாழ்வின் படிகள்

ஆன்ம வாழ்வின் படிகளை நான்கு முக்கிய பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

4) ஞானத் துயில் நிலை (mystical)

↑

3) ஏகாந்த நிலை (contemplative)

↑

2) அறிவுசார் நிலை (intellectual)

↑

1) ஐம்புல நிலை (sensory)

இறையனுபவத்தைப் பெறத் துடிக்கும் ஒவ்வொருவரும் முதன் முதலாக ஐம்புல வாயிலாக, குறிப்பாக கட்புல செவிப்புல ஊடகங்கள் வாயிலாக இறையுணர்வைத் தம் உள்ளங்களில் புகுத்துகின்றனர்.

இறைவனைப் பற்றிய படங்கள், காட்சிகள், பாடல்கள், நாடகங்கள், கதைகள் போன்றவற்றால் இறையுணர்வு பண்படுத்தப் படுகின்றது. ஆன்மீக வாழ்வில் இது ஓர் ஆரம்பக் கட்டமே. அடுத்ததாக அறிவு ரீதியாக வளர்ச்சியடையும் ஒருவரின் உள்ளத்தில் பல கேள்விகள் எழுகின்றன. படைப்பு, மனித வாழ்வு, அதன் அர்த்தம், அதன் முடிவு, உலகில் பரந்து கிடக்கும் நன்மை தீமைகள், வாழ்வின் சவால்கள் போன்ற பெரிய கேள்விகளைச் சுமந்து கொண்டு அவற்றிற்கான விடைகளைக் காணத் துடிக்கும் கட்டம் இது.

அறிவு ரீதியாக வளர்ச்சியுற்ற ஒருவரின் உள்ளத்தில் வாழ்வின் நிலையாமையும், வெறுமையும், உறுதிப்பாடற்ற தன்மையும், உறவுகளின் நிலையற்ற போக்கும், மானிட உடலினதும் உள்ளத்தினதும் பலவீனங்களும் ஓர் ஏகாந்த நிலைக்குத் தள்ளி விடுகின்றன. புறநிலைகளில் அமைதியைக் காணத் துடித்த மானிட இதயம், ஆன்ம வேட்கை கொண்டு ஓர் அக நிலையில் அதாவது ஏகாந்த நிலையில் அமைதியைக் காண விழைகிறது. அடுத்ததாக ஏகாந்த நிலையில் இருந்து தத்தமது நனவுலகக் கனவுலக ஊடகங்களைக் கடந்து பரம் பொருளோடு இரண்டறக் கலக்கும் நிலையே ஞானத்துயில் நிலையாகும்.

## ஞானத்துயில் என்ற சொல் குறிப்பவை

ஞானத்துயில் (mysticism) என்பது மறைபொருளான ஒரு இரகசியம் (mystery) அல்ல; ஆவியுலகு (spiritualism) அல்ல; தொலையுணர்வு (telepathy) அல்ல; தொலை அசைவு (telekinesis) அல்ல; புதுமை (miracle) அல்ல; இயற்கைக்கு அப்பாற்பட்டது (supernatural) அல்ல; காட்சிகள் (visions) அல்ல; அசரீரி வாக்கு (voices) அல்ல;

Mysticism என்ற ஆங்கிலச் சொல் mustikos என்ற கிரேக்க சொல்லிலிருந்து வந்ததாக அறிஞர்கள் கூறுகின்றனர். உதடுகள், கண்கள் போன்றவற்றை மூடிக்கொள்ளல் என்னும் உட்பொருளை அச் சொல் கொண்டிருந்தது. பின்பு அச் சொல் புத்தியையும் சித்தத்தையும் அடக்கி ஆன்ம அனுபவம் பெறும் நிலை என்ற அர்த்தத்தைப் பெற்றது.

"ஆங்கார முள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டெரித்து
தூங்காமற் தூங்கி சுகம் பெறுவதெக்காலம்?"

என்ற கவிதையிலே ஞானத் துயிலின்[1] சாயல் தோன்றுகிறது.

---

[1] "அனுபூதி" என்ற சொல்லை mysticism என்ற ஆங்கிலச் சொல்லுக்காகப் பயன்படுத்துவது வழக்கமாய் உள்ளது எனினும் மேற்படி தகவல்களைக் கருத்தில் கொண்டு "ஞானத்துயில்" எனும் சொல்லை இங்கு பயன்படுத்துகிறேன்.

''எதனாலும் நிறையாத வெறுமையிது — உன்
அருளின்றித் துயிலாத இதயமிது''

என்ற பாடலில் அருட்துயிலின் சாயல் தோன்றுகின்றது.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் கான மணிவிளக்கே''

என்ற செய்யுளில் உளத் துயிலின் சாயல் தோன்றுகிறது.

''காலமிது காலமிது கண்ணுறங்கு மகளே
காலமிதைத் தவறவிட்டால் தூக்கமில்லை மகளே''

என்ற தாலாட்டுப் பாடலிலே உடற்றுயிலின் சாயல் தோன்றுகிறது.

இன்னும் செயற்கையாகத் தூண்டப்படும் hynotism, auto-suggestion என்பவற்றிற்கு அறிதுயில் என்ற சொல் வழக்கிலுள்ளது.

உண்மையான ஞானத்துயில் நிலை என்பது புலன்களைக் கடந்த, வடிவமற்ற shapeless), உருவமற்ற (formless), நிறமற்ற, மணமற்ற, ஒலியற்ற ஓர் அனுபவமாகும். இவ்வனுபவத்தைச் சொற்களில் எடுத்தியம்புவது முடியாத காரியம் என்றே ஞானத்துயில் நிலையடைந்த எல்லோரும் கூறுகின்றனர் எனினும் ஒருசிலர் இவ்வனுபவத்தின் சிறு சாயல்களையும் விளக்கங்களையும் தந்துள்ளனர். அனைத்திலுமே வேற்றுமைகளைத் தாண்டி, காண்பவன்-காணப்படு பொருள் என்ற பேதம் நீங்கி, ''எல்லாம் ஒன்றே'' என்ற இரண்டறக் கலந்த அனுபவத்தை ஞானத்துயிலாளர்கள் கூறியுள்ளனர். புலன்களோ (senses), புத்தியோ (reason) இவ்வனுபவத்தை ஊடறுத்துச் செல்ல முடியாது என்பது அவர்களது நிலைப்பாடாகும்.

## புறநோக்கு ஞானத்துயில் (Extrovertive Mysticism)

ஞானத்துயிலாளரிடையே இரு சாரார் உளர். புறநோக்கு, அகநோக்கு ஞானத்துயில் என்று பிரிக்கலாம். இறைவனை வெளி நிலையில் காண்பவர்களே புறநோக்கு ஞானத்துயிலாளர்களாகும். இவர்கள் ''கடலது, அலையது, மலையது, நதியது... சகலதும் இறைவனே'' என்ற அனுபவத்தைக் காண்பவர்களாகும். எங்கு நாம் ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரித்துப் பார்க்கிறோமோ அங்கெல்லாம் நாம் நிறைவு பெறாதவர்களாகவே இருக்கிறோம் என்பது அவர்களது விளக்கமாகும். வேறுபடுத்திக் காணும், வேறுபடுத்திப் பார்க்கும்

நிலை உள்ளவரை நாம் நிறைவு பெறாதவர்களாகவே இருப்போம். ஆகவே நாம் தாண்ட வேண்டிய ஆன்ம படிகள் இன்னும் பல உள்ளன என்பது அவர்களது நிலைப்பாடு. ஆனால் இக்கோட்பாட்டை எல்லோரும் ஏற்றுக் கொள்வதில்லை, படைத்தவனைப் படைப்போடு இணைப்பது அல்லது சமமாக்குவது சடப்பொருள் வழிபாடு என்று சிலர் வாதிடுகின்றனர்.

## அகநோக்கு ஞானத்துயில் (Introvertive Mysticism)

மானிட மனம் உணர்ச்சிகளும், கிளர்ச்சிகளும், உளைச்சல்களும், ஆசைகளும் நிறைந்தது என்பது உண்மை. எனினும் மானிட மனம் (individual self) தன் உணர்ச்சிகள், ஆசைகள் போன்றவற்றைக் களைந்து, தனது நனவுலக கனவுலகக் களஞ்சியத்தையும் வெறுமையாக்கிய நிலையில் அது பரம்பொருளோடு (universal self) இரண்டறக் கலந்து விடுகிறது என்றும், ஒரு நிலைப் படுத்தப்பட்ட மனமே கடவுள் என்றும் அகநோக்கு ஞானத்துயிலாளர்கள் வாதிடுகின்றனர்.

## இறைசார் ஞானத்துயில் (Theistic Mysticism)

யூத மதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்கள் இறைசார் ஞானத்துயில் கொள்கையுடையவை. அதாவது படைத்தவன், படைக்கப்பட்டவை என்ற முக்கிய பிரிவைக் கடைப்பிடிப்பவை. இறைவன் என்ற மாபெரும் சக்தி, ஒன்றுமில்லாமையிலிருந்து உலகத்தைப் படைத்து, மனிதனை உருவாக்கி, அவனுள் அழியாத ஆன்மாவை வைத்தார் என்பதும் மனித ஆன்மா ஒரு தனித்துவத்தைக் கொண்டது என்பதும் இம் மதங்களின் கோட்பாடாகும்.

நெருப்பிலே கிடக்கும் இரும்புத் துண்டு நெருப்பாக மாறினாலும் அது இரும்புத் துண்டாகவே இருக்கும். அவ்வாறே மானிட ஆன்மா இறைவனோடு கலந்தாலும் தன் தனித்துவத்தைக் கொண்டுள்ளது என்றும், இறைவனின் சாயலில் பங்கெடுக்கிறதே தவிர இறைவனாவதில்லை என்றும் இச் சமயங்கள் கூறுகின்றன.

## இறைசாரா ஞானத்துயில் (Non-theistic Mysticism)

இந்து மதமும் பௌத்தமும் பெரும்பாலும் இறைசாரா ஞானத்துயில் கொள்கையுடையன. நாம் ஒரு மாய உலகில் வாழ்கிறோம் என்பது இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவமாகும். அதாவது இவ்வுலகை நோக்கும் நாம் நமது வரையறைக்குட்பட்ட ஊடகங்கள் வழியாக (finite senses) பார்க்கின்றோம். இம் மாயை நீங்கியதும்

நாம் பரம் பொருளாகி விடுகிறோம் காண்பவன், காணல், காணப் படு பொருள் மூன்றும் நீங்கி, பரம் பொருளோடு சங்கமமாகிடும் நிலையே இந்துமத ஞானத்துயில் நிலையாகும்.

இந்துமதம் நன்மையையோ தீமையையோ ஏற்பதில்லை. நன்மை தீமை என்பன அவரவர் நோக்கும் மன நிலையைப் பொறுத்ததென்பது இந்துமத தத்துவம். ஆனால் கௌதம புத்தர் இந்த உலகில் துன்பம் நிறைந்துள்ளது என்றும் இத்துன்ப நிலையை எவ்வாறு நீக்கலாம் என்றும் ஆராய்வதற்காக அரச நிலை துறந்து, வனவாசமெய்தி, கடுந்தவம் பூண்டு, வறியவரோடு வாழ்ந்து ஒளி பெறறுத் திரும்பினார். திரும்பியதும் அவர் கூறிய அறிவுரை என்னவெனில், மானிடர் தம் ஆசைகளினால்தான் அலைக்கழிக்கப்பட்டுத் துன்பப்படுகிறார்கள். ஆகவே ஆசையைத் துறப்பதே அமைதிக்கு வழி என்று கூறி, எட்டு வழிகளைச் சொல்லி மக்களை வழி நடத்தினார். கடவுள் என்று ஒருவரை அவர் ஏற்றுக்கொள்ளாவிடினும் ஞானத்துயிலாளர் வரிசையில் முக்கியமான ஒருவராக அவர் திகழ்கிறார்.

## ஞானத்துயில் நிலையின் பொதுவான தத்துவங்கள்

1) ''அனைத்தும் ஒன்றே'' என்ற நிலைப்பாடு
(The vision of Oneness)

2) காலம், இடம் கடந்த கவினுறு தோற்றம்
(The vision of Timelessness)

3) புலன் வழி கடந்த பூரண மனம்
(The vision of a Self)

4) அனைத்தையும் அரவணைக்கும் ஒரு பேரன்புத் திளைப்பு
(The vision of a Universal Love)

## Bibliography

*Collected Works of St. John of the Cross*
*The Cloud of Unknowing (author unknown)*
*The Teachings of the Mystics, Walter T. Stace*

Synopsis

## Mysticism: A Spiritual Experience

As there are changes in the physical body, there are also changes in the spiritual life. The basic process of the spiritual life can be seen in four steps:

1. *The empirical level,* where the devotee experiences God through the senses;

2. *The intellectual level,* where the devotee uses analytical intellectual knowledge to experience God;

3. *The contemplative level,* where the thirsting soul of the devotee tries to find peace within its interior dimension;

4. *The mystical level,* where the human soul goes beyond perceptions, memories and dreams, and attains union with the Absolute.

True mysticism is an extra-sensory experience which usually cannot be expressed in words; however, some mystics have given us a few indications. Mystics have spoken about it as a state where one goes beyond all multiplicity and beyond the distinction of seer and seen, and attains the experience of undifferentiated unity.

*Extrovertive mystics* experience all of nature as God, and claim that we fall short of perfection as long as we hold on to multiplicity. However, some disagree, saying that equating nature with God is idolatry. *Introvertive mystics* hold that when the individual self empties itself of its feelings, desires and dreams, it attains union with the universal self. According to them, God is nothing but the self that has attained onepointedness.

*Theistic mysticism* is found in Judaism, Christianity and Islam; these, religions maintain a sharp distinction between creator and creation. Theistic mysticism holds that even when the human soul attains union with God, it maintains its own individuality and that it does not become God, but only partakes in the perfection of God.

*Non-theistic mysticism* can be found, in general, in Hinduism and Buddhism. According to Hinduism, we are under an illusion when we see the world through our finite senses; when the illusion is removed, we realize that we are one with the universal self. According to Buddhism, human beings suffer because of desire, and the way to tranquility is to eliminate desire. For this the Buddha taught the Eightfold Noble Path.

The basic insights of mysticism are as follows: the vision of Oneness; the vision of Timelessness; the vision of a Self; and the vision of a Universal Love.

**Patrick Gnanapragasam, O. M. I.**

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்;
நீடிய பிணியால் வருந்துகின் றோர் என்
நேர் உறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழை களாய்நெஞ்(சு)
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்!

— வள்ளலார்

# கார்ல் றொஜேர்ஸின் (CARL ROGERS)

## "பாதிப்புற்றவர்" மைய சிகிச்சை முறை

— மோ. ஷோபன் றூபஸ்

### உட்புகுமுன்

எமது நாட்டில் போர் தற்காலிகமாக ஓய்ந்துள்ளது. பாரிய அழிவுகளை ஏற்படுத்திய போர் ஆயுதங்கள் பெரும் சிரமத்துடன் அமைதி காக்கின்றன.

போர் தற்காலிகமாக ஓய்ந்தாலும் போரின் எதிரொலிகள் இன்னும் மறையவில்லை. போர் ஆயுதங்கள் மௌனம் காத்தாலும் அவைகளின் அணி வகுப்பு நிறுத்தப்படவில்லை.

போர் எமது சமுதாயத்தில் விட்டுச்சென்ற அதன் விளைவுகள் சொல்லில் அடங்காதவை. போரின் எச்ச சொச்சங்கள் எமது சமுதாயத்தில் இன்னும் பல வருடங்கள் தொடர்வது தவிர்க்க முடியாதது.

போரின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவித்த நாம் அனைவரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ, உடல் ரீதியாகவோ, உளரீதியாகவோ பாதிக்கப்பட்டுள்ளோம். போர் ஏற்படுத்திய மன அழுத்தம் எம்மைப் பல்வேறு விதத்தில் தாக்கியுள்ளது. நாம் எவ்வாறு உடல் ரீதியான காயத்தைப் போக்க மருத்துவரை நாடுகின்றோமோ, அவ்வாறே உள ரீதியான பாதிப்பைத் தணிக்க உளவியலாளரை நாட வேண்டும். இவ்வாறு உளவியல் துறையானது மனிதனின் தனிப்பட்ட, சமூகப் பிரச்சனைகளுடன் தொடர்புபட்டுள்ளது. மன நல சிகிச்சை முறையில் கார்ல் றொஜேர்ஸின் 'பாதிப்புற்றவர்' – மைய சிகிச்சை முறையானது (client-centred therapy) மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

### 1. மன நோய் பற்றிய சிந்தனை வளர்ச்சி

மன நல சிகிச்சை முறையானது மன நோய்க்கான உடலியல், உயிரியல் காரணிகளைக் குறிப்பதற்கு மேலாக உளவியற் காரணிகளையே குறித்து நிற்கின்றது.

ஒரு மன நோயாளி தீய ஆவியால் பீடிக்கப்பட்டுள்ளான் என்பதே மிகவும் பழமையான சிந்தனையாகும். ஆகவே அதற்குரிய ''சிகிச்சை'' முறைகளாக சவுக்கடிகளும், பட்டினி போடுதலும், உயிருடன்

எரித்தலும் நடைமுறைப்படுத்தப்பட்டன. மனநோய் பற்றிய சிந்தனையின் முதலாவது முன்னேற்றமானது பண்டைக்காலக் கிரேக்க மருத்துவ நிபுணரான ஹிப்போகிரேட்டிஸ் (Hippocrates - ஏறாத்தாழ கி. மு. 460 - 377) என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. அவர் சாத்தானியல் வாதத்தை நிராகரித்து, உடலில் உள்ள சுரப்பிகளின் சம நிலையில் ஏற்படும் குழப்பத்தின் விளைவே மனநோய் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். இருந்த போதிலும், இந்த முன்னேற்றகரமான எண்ணமானது நெடுங்காலம் நீடிக்கவில்லை; மத்திய காலப்பகுதியில் மீண்டும் சாத்தானியல் வாதம் புதுப்பிக்கப்பட்டது. வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த பல மருத்துவர்களும், விஞ்ஞானிகளும் மனநோய் பற்றிய அறிவின் வளர்ச்சிக்குப் பெரும் பங்கு ஆற்றியிருக்கின்றார்கள். சிக்மண்ட் புரோயிட் (Sigmund Freud) *(1856 - 1939)* என்பவரின் கருத்து, ''ஒரு மனநோயாளி தன்னுடைய சூழலுடன் ஒத்து இணையப் பெரிதும் இடர்ப்படுபவர்'' என்பதாகும். அவருடைய உளப் பகுப்பாய்வுச் சிகிச்சை முறையானது (psycho-analysis) உளவியல் துறையில் அரை நூற்றாண்டு வரை பெரும் ஆதிக்கம் செலுத்தியது. அடிமனத்தின் கிளர்ச்சிகளினாலே மனிதன் தூண்டப்படுகின்றான் என்னும் உளப் பகுப்பாய்வுச் சிந்தனையை எதிர்த்தே தோற்றப்பாட்டு வாத அணுகு முறை (phenomenological approach) தோற்றம் பெற்றது. அது 'ஒரு தனி மனிதனின் தனிப்பட்ட உலகப் பார்வையையும், நிகழ்வுகளின் தனிப்பட்ட விளக்கத்தையும் கருத்தில் கொண்டுள்ளது'. இந்த சிகிச்சை முறையானது மனித இயல் சிகிச்சை முறை (humanistic therapy) எனவும் அழைக்கப்படுகிறது. மனித இயல் சிகிச்சை முறைகளில் மிகவும் பிரபல்யமான ஒரு சிகிச்சை முறையான 'பாதிப்புற்றவர்' மைய சிகிச்சை முறையை நாம் நோக்கும் போது இந்த அணுகு முறை மிகவும் தெரிவாகின்றது.

## 1 . 1 'பாதிப்புற்றவர்' - மைய சிகிச்சை முறை

கார்ல் றொஜேர்ஸின் ''பாதிப்புற்றவர்'' - மைய சிகிச்சை முறையானது, 'பாதிப்புற்றவரே அவரின் பிரச்சனைக்குரிய தீர்வினைக் காணக்கூடிய மிகச் சிறந்த கருவி' என்னும் சிந்தனையின் அடிப்படையிலே அமைந்துள்ளது.

கார்ல் றொஜேர்ஸ் (Carl Rogers) என்பவர் சிக்காகோ நகரத்துக்கு அண்மையில் *1902* ம் ஆண்டு பிறந்தார். இவர் 1926 ல் உளவியல் கல்லூரியில் இணைந்து. *1931* இல் தனது கலாநிதிப் பட்டத்தை கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பெற்றார். உளப்பகுப்பாய்வுச் சிகிச்சை முறையானது நீண்டகாலம் எடுக்கின்றது என்றும்,

அது குறைந்த பயனையே விளைவிக்கின்றது என்றும் றொஜேர்ஸ் தன்னுடைய அனுபவத்தில் கண்டறிந்தார். இவர் தனது புத்தகங் களில் (counselling and psychotherapy 1942, client - centred therapy 1951) 'உதவி நாடி வருபவரை அவருடைய பிரச்சனைக்குரிய தீர்வை நோக்கி வலிந்து செலுத்தாமல் எவ்வாறு அவர் தீர்வைக் கண்டடைய அவருக்கு உதவ வேண்டும்' என்று விளக்கியுள்ளார். உணர்வுகள் ரீதியான பிரச்சினைகளுக்கு இவரால் பயன்படுத்தப்பட்ட வழி காட்டலற்ற ஆற்றுப்படுத்தல் அணுகு முறையானது (non - directive counselling) மிகவும் பிரபல்யம் அடைந்தது.

இந்த அணுகு முறையில் உதவி நாடி வருபவருக்கு எந்த நேர மும் விடைபெற்றுச் செல்வதற்கும், மீண்டும் வருவதா? இல்லையா? என்று தீர்மானிப்பதற்கும் சுதந்திரம் உண்டு. இங்கு ஆற்றுப்படுத்து னர் பொறுமை வாய்ந்தவராகவும், அவதானம் உள்ள செவிமடுப் பாளராகவும் திகழ்வார். ஆற்றுப்படுத்துனரின் நோக்கமானது உதவி நாடி வருபவர் வெளிப்படுத்தும் உணர்வுகளுக்குத் தீர்ப்புச் சொல்வதோ அல்லது அவற்றை விபரிப்பதோ அல்ல. மாறாக அவற்றைத் தெளி வாக்குவதே ஆகும். பொதுவாக ஆரம்பத்தில் பாதிப்புற்றவர் தன்னைப் பற்றிக் குறைவான மதிப்பீடே கொண்டிருப்பார். ஆனால் காலப்போக்கில் தன்னுடைய பிரச்சனையை எதிர்நோக்கி அதற் குரிய தீர்வினைக் காணும்போது அவர் தன்னைப் பற்றி நல்லெண் ணம் கொள்ள ஆரம்பிப்பார்.

## 2. ஆற்றுப்படுத்துனருக்கு இருக்கவேண்டிய ஆற்றல்கள்

'பாதிப்புற்றவர்' - மைய சிகிச்சை முறையை ஓரளவு இலகு வாக விபரிக்கலாம். ஆனால் நடைமுறையில் அது மிகவும் நுணுக்க மானது. அதற்கு மிகவும் திறமை வாய்ந்த ஆற்றல்கள் தேவை.

1967ல் றொஜேர்ஸ் தாம் செய்த ஆய்வில் இருந்து, 'சில ஆற்றுப்படுத்துனர்கள் பாதிப்புற்றவரிடம் நேரான மாற்றத்தை ஏற் படுத்தும் அதே வேளை, சில ஆற்றுப்படுத்துனர்கள் எதிர் மறையான மாற்றத்தை விளைவிக்கின்றனர்' என்று கண்டறிந்தார். ஆகவே தேவையான மனநிலையையும், ஆற்றல்களையும் கொண்டுள்ள ஆற்றுப்படுத்துனராலேயே நேரான பயனை விளைவிக்க முடியும் என்று அறிந்த அவர், ஆற்றுப்படுத்துனருக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான ஆற்றல்களாக **உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல், மதிப்பு அளித்தல், நேர்மைத் தன்மை** ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார்.

## 2. 1. உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல்

உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல் என்னும் பதம் இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது:

(i) உணர்வுகளைச் சரியாகப் புரிந்து அவற்றின் கருத்தைத் தெரிந்து கொள்ளுதல்.

(ii) தாம் புரிந்து கொண்டவற்றைத் தகுந்த முறையில் பாதிப்புற்றவருக்கு வெளிப்படுத்துதல்.

பாதிப்புற்றவர் எவ்வாறு தன்னுடைய பிரச்சினையை நோக்கு கின்றாரோ அவ்வாறே ஆற்றுப்படுத்துனரும் நோக்க வேண்டும். ஆனால் 'அனுதாபமும் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதலும்' ஒன்றல்ல. பாதிப்புற்றவரின் உணர்வுகளினால் ஆற்றுப்படுத்துனர் பாதிப்படையக் கூடாது. அவ்வாறு பாதிப்புற்றால் அவரே உதவி நாடிச் செல்ல வேண்டியிருக்கும்.

## 2. 2. மதிப்பு அளித்தல்

'' கடவுள் மனிதனைத் தமது சாயலாகப் படைத்தார். தெய்வச் சாயலாகவே அவனைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர் களைப் படைத்தார்'' (ஆதி 1 : 27)

இந்த உண்மைகளை நன்கு அறிந்து, ஆற்றுப்படுத்துனர் தன்னி டம் உதவி நாடி வருபவரை மதித்து நடப்பார். உதவி நாடி வருபவ ரின் சுதந்திரத்தையும், தாமாகவே சொந்தத் தீர்மானம் எடுக்கும் உரிமையையும் வழங்குதலானது மதிப்பு அளித்தலில் அடங்கும். இவ்வாறு ஆற்றுப்படுத்துனர் உதவி நாடி வருபவருக்கு மதிப்பு அளிப்பதால், உதவி நாடி வருபவர் ஆற்றுப்படுத்துனருடனான தமது உறவை ஆழப்படுத்துவார்.

## 2. 3. நேர்மைத் தன்மை

நேர்மையான ஓர் ஆற்றுப்படுத்துனர் தன்னை மறைவின்றி வெளிப்படுத்துவாரே தவிர பட்டம் பதவியின் போர்வையில் செயற் பட மாட்டார். அவர் வேடம் போடுவதாக பாதிப்புற்றவர் கருதி னால் அவரிடம் தம்மை வெளிப்படுத்தத் தயங்குவார்.

பாதிப்புற்றவர் தன்னைத் தானே தன்னுடைய குறைநிறைகளுடன் ஏற்றுக்கொள்ள ஆற்றுப்படுத்துனர் உதவி செய்ய வேண்டும். பாதிப் புற்றவர் கூறுவது விளங்காவிடின் ஆற்றுப்படுத்துனர் அதை மறை

வின்றி ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் அவரின் பிரச்சினை தன்னுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாயின் அதற்குத் தகுந்த தேர்ச்சி பெற்ற நபரிடம் அவரை சிபாரிசு செய்ய வேண்டும். இத்தகைய நேர்மைத் தன்மைகள் ஆற்றுப்படுத்துனரிடம் அவசியம் இருக்க வேண்டும்.

## 3. உதவி நாடுபவரின் வகைகள்

பாதிப்புற்றவர்கள் அல்லது உதவி நாடி வருபவர்கள் பல ரகத்தி னர் என்னும் உண்மையை ஆற்றுப்படுத்துனர் அவசியம் அறிந்து வைத்திருக்க வேண்டும். அவர்களுடைய நடத்தையிலிருந்து அவர்கள் எந்த வகையைச் சேந்தவர்கள் என்று அடையாளம் கண்டு விட்டால் ஆற்றுப்படுத்தும் செயல்முறை இலகுவானதாக இருக்கும். இவர் களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1) எதிர்ப்பினை வெளிப்படுத்துவோர்

2) தயங்கித் தயங்கி வருவோர்

3) தாமாக முன்வருவோர்

### 3. 1. எதிர்ப்பினை வெளிப்படுத்துவோர்

இவர்கள் வந்தவுடன் தங்களை அறியாமல் எதிர்ப்பினை வெளிப் படுத்துவார்கள். ஏனெனில் அவர்கள் தங்களுக்குள் ஆழமாகச் செல்ல விரும்புவது இல்லை. ஆற்றுப்படுத்துனரின் கவனம் தன்பால் மையப் படுத்தப்படுவதை விரும்பும் உதவி நாடி வருவோரும் அவ்வாறே செயற்படுவர் ஆற்றுப்படுத்துனர் அவர்களின் எதிர்ப்பையும், ஒத்துழைப்பின்மையையும் அவர்களின் உணர்ச்சிகளின் வெளிப்பாட்டில் இருந்து அறிந்து கொள்வார். இந்த எதிர்ப்பை அவர்கள் வெவ் வேறு விதமாய் வெளிப்படுத்தலாம்: அமைதியாக இருப்பதன் மூல மும், சிரித்து அதிகமாகக் கதைப்பதன் வழியாகவும், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று காட்டுவதன் ஊடாகவும், ஆற்றுப்படுத்துன ரின் கவனத்தைத் திசை திருப்புவதன் மூலமும் வெளிப்படுத்தலாம். ஆகவே ஆற்றுப்படுத்துனர் மிகவும் பொறுமையாக இருந்து, பாதிப் புற்றவர் முக்கியமான பிரச்சினையில் தன் கவனத்தை வைத்திருக்க உதவ வேண்டும். மேலும் யதார்த்தமான தமது பிரச்சினையை எதிர்கொண்டு அதனைத் தாமே தீர்ப்பதற்கான வழியைக் கண்டு பிடிக்க உதவ வேண்டும்.

### 3. 2. தயங்கித் தயங்கி வருவோர்

இவர்கள் வேறு ஒருவரால் ஆற்றுப்படுத்துனருக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்களாக இருப்பர். ஆகவே இவர்கள் தயங்கித் தயங்கி வருவர். ஆற்றுப்படுத்துனர் இவர்களுடைய எண்ணங்கள் உணர்வுகளுடன் இவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவர்களும் முன்னைய வகையினரைப் போல் கதைக்க மறுக்கலாம்.

ஆனால் இவர்களைக் கதைக்கப் பண்ணுவது முன்னையவர்களைக் கதைக்கப்பண்ணுவதை விட இலகுவானது. இவர்கள் மூர்க்கத்தனமான செய்கைகளில் இறங்குவார்கள். பொதுவாக இவர்களுடைய நடத்தை சமூக விரோதமானதாக இருக்கும். தங்களுடைய பிரச்சனைக்குள் செல்வதைத் தவிர்ப்பதற்காக ஆற்றுப்படுத்துனருக்கு அளவு கடந்த எரிச்சலை உண்டுபண்ணுவார்கள். மனநல சிகிச்சையை நாடுவது தங்களுடைய சுய மரியாதைக்கு ஓர் இழுக்கு என்று சொல்லப்படுகின்ற தப்பான எண்ணமே இதற்கான அடிப்படைக் காரணமாகும். இந்தத் தப்பெண்ணத்தை நீக்குவது மிகவும் கடினம். ஆனால் ஆற்றுப்படுத்துனர் மிகுந்த பொறுமையுடனும், இரக்கத்துடனும் செயற்படும் போது மிகுந்த பலனைப் பெறலாம்.

### 3. 3. தாமாக முன்வருவோர்

இவர்களுடன் தொடர்பு கொள்வது மிகவும் இலகுவானது. இவர்கள் முன் குறிப்பிட்ட இரு வகையினரையும் போல் அல்லாது ஆற்றுப்படுத்தலின் விளைவையும் பெறுமதியையும் நன்கு அறிந்தவர்கள். இவர்கள் தாங்கள் மாற வேண்டும் என்ற எண்ணத்தினால் வளர்ச்சியைக் கண்டடைவார்கள். இவர்கள் ஆற்றுப்படுத்துனருடன் நன்கு ஒத்துழைப்பார்கள். இதனால் இவர்களுடைய வளர்ச்சி மிகத் துரிதமாக நடைபெறும்.

### முடிவாக

கார்ல் றொஜேர்ஸின் 'பாதிப்புற்றவர்' — மையச் சிகிச்சை முறை என்னும் ஆய்வுக் கட்டுரையின் சுருக்கமான இந்த மொழி பெயர்ப்பில் மனநல சிகிச்சை முறையின் சிந்தனை வளர்ச்சி பற்றியும், பாதிப்புற்றவர் - மைய சிகிச்சை முறையில் ஓர் ஆற்றுப்படுத்துனருக்கு இருக்க வேண்டிய ஆற்றல்கள் பற்றியும், அவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்புற்றவரின் வகைகள் பற்றியும் பார்த்துள்ளோம்.

இந்த அணுகு முறையிலும் ஏனைய சிகிச்சை முறைகள் போன்று சில குறைபாடுகள் உண்டு. (உதாரணம்: இந்த அணுகு முறையானது தன்னுடைய பிரச்சினையை வெளிப்படுத்தக் கூடியவருக்கு மட்டுமே பயன்படும்) ஆகவே இந்த அணுகு முறையில் காணப்படும் பல சிறந்த முறைகளை அடிப்படையாகக் கொண்டு, ஏனைய முறைகளில் உள்ள சிறந்த முறைகளையும் உள்வாங்கிய ஒரு 'பாதிப்புற்றவர் - மைய - சிகிச்சை' முறையே சிறந்த சிகிச்சை முறையாகும்.

## துணை நின்ற நூல்கள்


1. அல்போன்ஸ், அ., உளநல உதவி, ed. 2, தமிழ்நாடு: மாறா வெளியீடு, 1994.

2) *Fuster, J. M., Personal Counselling, ed. 5 Bombay : St. Poul Press Training School, 1991.*

3) *Nimeth Albert, J., To Listen Is To Heal, Bombay: St. Paul Press Training School, 1991.*


## Synopsis

Carl Rogers' client-centred therapy has an important role to play with mentally disordered people in our milieu.

According to the earliest theories, a person with a mental disorder was Considered to be possessed by evil spirit. Flogging, starving and even burning to death were not infrequent forms of 'treatment' for Such people.

But Carl Rogers' client-centred therapy is based on the assumption that the client is the best expert on himself/herself in finding out a solution to his/her problem. And according to this therapy the counsellor should have some skills to build up a relationship and thus make the counselling effective. Rogers believes that the most important qualities for a therapist are empathy, respect and genuineness.

We can divide the clients into three groups and by this classification the counsellor can understand how to treat eaeh type.

1) Resistant Clients: These types of clients will start resisting because he/she does not want to go deeper into his/her personality.

2) Reluctant Clients: These types of clients would be someone introduced to the counsellor by someone else. They at the beginning will resist going into the matter.

3) Voluntary Clients: These types of clients will feel in themselves a need for a change and they will co-operate with the counsellor.

**M. Shoban Rufus**

---

எவன் தொடர்ந்த விழிப்புணர்வு கொண்டுள்ளானோ,
எவன் ஒவ்வொரு நொடியும் முழுமையாக பிரசன்னமாய்
இருக்கிறானோ, அவனே ஞானி -

அந்தோனி டி மெல்லோ
''பறவையின் பாடல்'' நூலில் இருந்து

---

# முழுமையாக்கலில் ஏக்கத்தின் தாக்கம்

— அ. அ. அமலராஜ்

சமகாலத் தலைமுறையினர் யுத்தத்தின் குழந்தைகளாக எமது மண்ணில் வர்ணிக்கப்படுகிறார்கள். யுத்தம் எமது சமுதாயத்தோடு இரண்டறக் கலந்துவிட்ட தொன்றாகவே - அது ஒய்ந்துள்ள இவ் வேளையிலும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில் யுத்தக் கலாச்சாரம் நாம் விரும்பியோ விரும்பாமலோ எமது தலைமுறைக்குள் ஊடுருவி விட்டது.

கோரமான இந்த யுத்தம் விட்டுச்சென்ற வடுக்கள் எம் மக்களின் உள்ளங்களில் அங்கலாய்ப்பினையும் ஏக்கத்தினையும் ஏற்படுத்தியிருக் கின்றன. யுத்தக் கலாச்சாரத்தின் விளைவாக பெரும்பாலான மக்கள் ஏக்கப் பெருமூச்சுக்களுடன், வேலை வாய்ப்பற்றவர்களாக, வீடற்ற வர்களாக, அங்கவீனர்களாக, விரக்தியடைந்தவர்களாக, எதிர் காலத்தில் நம்பிக்கை இழந்தவர்களாக, வாழ்வின் அர்த்தத்தைத் தொலைத்து நடைப்பிணங்கள் போல் வாழத் தலைப்படுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் மக்களின் அவல நிலையினை அர்த்தமுள்ளதாக்கி, ஏக்கப் பெருமுச்சுக்கள் மனிதனைத் பூரணப்படுத்தும் காரணிகள் என்பதனை எடுத்துரைத்து இறை இருப்பினை உறுதிப்படுத்தும் சொறென் கீர்கெகார்ட் (Soren Kierkegaard), போல் தில்லிச் (Paul Tillich), நிபூர் (Niebuhr), ஆகியோர் ஏக்கம்[1] பற்றி எழுப்பும் சிந்தனைச் சித்தாந்தத்தை நோக்குவோம்.

## சொறென் கீர்கெகார்ட் ( Soren Kierkegaard ) ( 1813 - 1855 )

கீர்கெகார்ட் ஏக்கம் பற்றி விபரிக்கையில் இது ''சுதந்திரத்தின் சாத்தியத் தன்மை'' என்று குறிப்பிடுகின்றார். இங்கு சாத்தியம் என்பது ''என்னால் முடியும்'' என்னும் தன்மை என்று குறிப்பிடு கின்றார். எதிர்காலத்தில் இருக்கக்கூடிய நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக, மனிதன் தனது சாத்தியத் தன்மைகளை அறிந்து

[1] Anxiety என்னும் ஆங்கிலச் சொல்லினை தமிழில் 'கவலை', 'ஏக்கம்', 'அக்கறை', 'பற்றார்வம்' என்னும் பதங்களால் மொழி பெயர்ப்புச் செய்கின்றனர். எனது இக்கட்டுரையில் 'ஏக்கம்' என்னும் பதத்தினைப் பயன்படுத்துகிறேன்.

அவற்றைப் பூர்த்தி செய்ய முனையும் போது அவனால் ஏக்கத்தினைத் தவிர்க்க முடியாது இருக்கின்றது. இது எல்லா மனிதரிடமும் காணப்படும் ''சாதாரண ஏக்கம்'' ஆகும். இது மனிதனை நிறைவாழ்வு நோக்கி நகர்த்திச் செல்கின்றது. ஆனால் இவ்வாறான சாதாரண ஏக்கங்களுக்கு முகம் கொடுத்து முன்னேறிச் செல்ல மனிதன் தவறுவானாயின் அது இயற்கைக்கு மீறிய உணர்ச்சியுடைய ஏக்கத்திற்கு (neurotic anxiety) அவனை உள்ளாக்கும்.

பொதுவாக, மனிதனின் சுய உணர்வே அவனைத் தீர்மானிக்கும் காரணியாக இருக்கின்றது. வாழ்வின் சாத்தியக் கூறுகளைப் பூரணமாக விளங்கிக் கொள்வதன் மூலமே இந்தச் சுய உணர்வு நிலையினை மனிதன் சுவீகரித்துக் கொள்கிறான். எனவே, மனிதன் தன்னைப் பற்றிய சுய விழிப்புணர்வில் வளருவது அவசியம். இந்தச் சுய விழிப்புணர்வு வளர்ச்சியிலே ஏக்கமானது செலுத்தும் தாக்கம் இன்றியமையாதது. ஆனால் சாத்தியக் கூறுகள் வாழ்வில் இல்லையெனின் ஏக்கத்தின் தாக்கம் இருக்காது. சாத்தியக் கூறுகள் நிச்சயமாக வாழ்வில் இருக்கும்; இதனால் ஏக்கத்தின் தாக்கத்தினையும் எவரும் தவிர்க்க முடியாது.

ஏக்கத்தினை உருவாக்கும் சூழமைவுகளைத் தவிர்ப்பது புத்திசாலித்தனமானதல்ல. ஏனெனில், மனிதனின் அடிப்படை அழைப்பு தனது உண்மையான சுயரூபத்தைச் சுவீகரித்துக் கொள்வதே; அவ்வாறு சுவீகரித்துக் கொள்வதற்கு இந்த ஏக்கத்தின் தாக்கமே வழிகோலுகின்றது. ஆயினும், தனது சமூகத்திற்கு இசைவுடையவனாகத் தன்னை மாற்ற மனிதன் நிர்ப்பந்திக்கப்படுவதால், தனது அடிப்படை அழைப்பு மட்டில் மனிதன் சிரத்தையற்றவனாக வாழத் தலைப்படுகின்றான். இதனால் ஏக்கத்தின் எதிரொலி அவனது காதுகளுக்கு எட்டுவதில்லை. இந்த நிலை மனிதனின் சுயத்தினைப் பலவீனமடையச் செய்கின்றது. ஈற்றில் இயற்கைக்கு மீறிய உணர்ச்சியுடைய ஏக்கத்திற்கு ஆளாகும் பரிதாப நிலைக்கு மனிதன் இட்டுச் செல்லப்படுகின்றான்.

மனிதன் மனிதனாக வளருவதற்கு ஏக்கம் இன்றியமையாதது. இந்த ஏக்கமே மனிதனுள் எப்பொழுதும் பிரசன்னமாயிருக்கும் கல்வி அறிவின் ஊற்று. சாத்தியக் கூறுகளினால் கல்வி புகட்டப்படும் மனிதன், தனது முடிவில்லாத் தன்மைக்கு ஏற்ப கற்பிக்கப்படுகின்றான். இதனால் அவன் இறப்பின் பின்னும் வாழ்வைக் காண முயலுகின்றான். ஏனெனில் அவனது அர்த்தம் தேடும் வாழ்க்கைப் பயணம், முடிவில்லாத வாழ்வு என்னும் அடித்தளத்தின் மீதே கட்டப்படுகின்றது.

## போல் தில்லிச் ( Paul Tillich ) ( 1886 – 1965 )

தில்லிச் என்பவர் மனிதன் தனது இருப்பின்மையை ('அசத்')[1] எய்தக்கூடிய சாத்தியம் பற்றிய விழிப்புணர்வே ஏக்கம் என்கிறார். இந்த நிலையை ''இருப்பின்மை பற்றிய இருப்பியல் விழிப்புணர்வு'' நிலை (existential awareness of non - being) என அழைக்கின்றார். ஏனெனில் இவ் விழிப்புணர்வு மனிதனின் கொள்கை அளவிலான அறிவு அல்ல; மாறாக இது மனித இருப்புடன் இரண்டறக் கலந்த, மனிதனிடமிருந்து பிரித்தெடுக்கப்பட முடியாத ஓர் அனுபவ அறிவாக இருக்கின்றது.

இறப்பிலிருந்து தப்பமுடியாது என்பது மனிதனுக்கு நன்கு தெரிந்த உண்மை. ஆயினும், ''இறப்பின் பின் வாழ்வு இருக்கிறதா?'' என்னும் கேள்வி ஏற்படுத்துகின்ற நிச்சயமற்ற தன்மை மனிதனின் மனதில் ஏக்கத்தினைத் தோற்றுவிக்கின்றது.

எதிர்காலம் பற்றிய சிந்தனை மனிதனின் உள்ளத்தில் பய உணர்வைத் தோற்றுவிக்கவும் தவறுவதில்லை. ஆனால், இந்தப் பய உணர்வு ஏக்கம் அல்ல. ஏக்கமும் பயமும் ஒன்றோடு ஒன்று இணைந்து இருப்பினும் இவற்றுக்கிடையே வேறுபாடு இருக்கின்றது. பயம் பருப்பொருள் கொண்டதாக இருக்கின்றது; பருப்பொருள் உருக்கொடுக்கும் பயம் அந்த நிகழ்வின் விளைவை எதிர்வுகூறும். ஆனால் ஏக்கத்திற்குத் தெளிவான பருப்பொருள் இல்லை. ஏக்கமானது சாவுக்குப் பின்னர் ஏற்படக் கூடிய நிச்சயமற்ற நிலைகளினால் தோற்றம் பெறுகின்றது. இவ்வாறு, ஏக்கம் இருப்பின்மை சார்ந்த அச்சுறுத்தல் பற்றியதாக இருக்கின்றது. பௌதிக அடிப்படையில் ஏற்படும் இறப்பின் அச்சுறுத்தலை மட்டும் அசத் என்று கூறிவிட முடியாது. ஒருவர் தனது இருப்பின் அர்த்தத்தை இழப்பதும் அசத் நிலையே. எதிர்கால இருப்பு அர்த்தமற்றதாய்த் தோன்றுவதால் ஏற்படும் ஏக்கத்தை வெல்வது எப்படி? அனைத்துப் பொருட்களுக்கும் அர்த்தம் கொடுக்கும் முடிவிலி நோக்கி நகரும் போதே இந்த ஏக்கம் அர்த்தம் பெறும். எனவே, எல்லாம் வல்ல இறைவன் மீது நம்பிக்கை கொள்வதே ஏக்கத்தின் மீது வெற்றி கொள்வதற்கான தகுந்த வழி ஆகும். விசுவாசம் ஏக்கத்தை இல்லாது செய்கின்றது. ஏனெனில் முடிவு முடிவிலியாகவும், ஏக்கம் வீரமாகவும் விசுவாசத்தினால் மாற்றப்படுகின்றன.

---

1 இந்திய மெய்யியலில் பயன்படுத்தப்படும் '' அசத் '' என்னும் சொல்லானது, போல் தில்லிச் குறிப்பிடும் Non - being என்னும் கருத்தினை ஓரளவிற்கு வெளிப்படுத்துகின்றது.

## நிபூர் ( Niebuhr ) ( 1892 - 1971 )

நிபூரின் கருத்துப்படி, ஏக்கம் முரண்பாட்டு மெய்மையில் தோற்றம் பெறுகின்றது. அதாவது, ஒரே நேரத்தில் சுதந்திரமாகவும், அடிமையாகவும் இருக்கும் முரண்பாட்டு மெய்மை நிலையே (Paradoxical Situation) ஏக்கத்தின் ஊற்று. ஏக்கம் ஒரு நிரந்தரமான சுதந்திரத்தின் இணைந்தியங்கும் பொருளாகவும், பாவத்தின் முன் நிபந்தனையாகவும் இருக்கின்றது.

மனிதனிடம் இருக்கும் வரையறைகளும், இவ் வரையறை பற்றிய அறிவின்மையும் ஏக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளாக இருக்கின்றன. மனித முயற்சிகள் ஒவ்வொன்றிலும் பல சாத்தியக் கூறுகள் வெளிப்படுத்தப்படுவதனால், செயலாக்கத்தில் இறங்க முடியாமலும், செய்யும் காரியங்களில் திருப்தி அடையாமலும், மனிதன் துன்புறுகின்றான். எவ்வாறு இருக்க வேண்டுமோ அதை மனிதன் அடைய முடியாததனால், ஏக்கத்துடனேயே காலத்தைக் கழிக்கின்றான். ஏக்கத்தினால் அலைக்கழிக்கப்பட்டவனாக முடிவு நிலையை முடிவிலியாகவும் ஏக்கத்தை வல்லமையாகவும், தங்கி வாழும் நிலையை தற்சார்பு நிலையாகவும் மாற்ற முயற்சிக்கிறான்.

மனிதனின் இந்த முயற்சிகள் நியாயமானதும் அடையக்கூடியதுமாயினும், இறை துணையின்றி இதனை அடைய முடியாது. இந்த முயற்சியின் மூலைக்கல் இறை இருப்புக் கொள்கையில் ஏற்படும் நம்பிக்கையும் விசுவாசமுமே.

## நிறைவாக

சமகால சிந்தனையாளர்களின் ஊக்கமூட்டும் " ஏக்கம் " பற்றிய தத்துவக் கோட்பாடுகள் உடைந்து போன உள்ளங்களுக்கு ஊக்கத்தினையும், வாழ்வின் அர்த்தம் தொலைந்து போய் விட்டதே என்று வாழா வெட்டிகளாக மடியத் துடிக்கும் மனங்களுக்குப் புத்தூக்கத்தினையும் தருவதாக அமைகின்றன.

ஏக்கம் இருப்பினை முழுமைப்படுத்தும் காரணியே. " நிச்சயமற்ற எதிர்காலத்தில் வாழ்வின் சாத்தியக் கூறுகளை நிறைவாக்க முடியுமா?" என்னும் கேள்வியே பெரும்பாலும் இந்த ஏக்கத்தை உருவாக்குகின்றது.

இன்று எமது சமுதாய சூழமைவை எடுத்து நோக்கினால் உயிர்களுக்கான - உடமைகளுக்கான மதிப்பும், பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படாததொன்றாகவே இருக்கின்றது. சமாதானம் பற்றிய பேச்சுக்கள் பரவலாகப் பேசப்பட்டாலும், சமாதான சூழ்நிலைகள்

குழப்பப்படக் கூடிய அச்சுறுத்தல்கள் தாராளமாக இருக்கின்றன. இது நிரந்தர சமாதானத்திற்காக ஏங்கும் மக்கள் மனதில் எதிர் காலத்தில் தோன்றக் கூடிய போர் பற்றிய பயத்தை ஏற்படுத்து கின்றது. போர் புரியும் இரு பகுதியினரும் ஆயுதங்களைச் சேகரிப்பதி லும், போர் புரிய வீரர்களைப் பயிற்றுவிப்பதிலும் ஈடுபடுவதனால், சமாதானம் பற்றிய ஏக்கம் பொதுமக்களிடையே பெரிய கேள்வியாக எழுந்துள்ளது. மர்மப் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள், துணிகரக் கொள்ளைகள், ஆயுத முனையில் மிரட்டல்கள் என்பன முன்குறைந்தபாடில்லை. எந்த நேரத்திலும் எதுவும் நிகழலாம் என்ற நிச்சயமற்ற சூழ்நிலை நிலவுகிறது. உண்மையிலேயே இந்நிச்சயமற்ற நிலை எம் மக்கள் மனதில் பாரிய ஏக்கப் பெருமூச்சுக்களைத் தோற்று விக்கின்றது. இந்த ஏக்கம் நிகழ்காலத்தின் அமைதியைச் சிதைப்பது போன்று தோன்றுவதால் இதிலிருந்து தப்பவே மக்கள் முனைகின்ற னர். ஆனால் இவ்வாறு தப்ப முனைவது நமது இருப்பிற்கு, நமது வாழ்க்கைக்கு அர்த்தம் தராது. மாறாக, நம்மை மன நோயாளி களாகவே மாற்றும்.

ஏக்கத்தில் இருந்து தப்பிவிட முயற்சிக்காது, நமது இருப்பினை முழுமைப்படுத்தும் கருவியாக ஏக்கத்தினைப் பயன்படுத்த வேண்டும். ஏக்கத்தைச் சரியான முறையில் எதிர்கொள்வதற்கு இறைவன் மீது நம்பிக்கை இன்றியமையாதது. இறை இருப்பின் மீது நாம் கொள் ளும் நம்பிக்கை, ஏக்கத்துக்கு விடைபகரும் மையமாக இருக்கின்றது. எனவே, ஏக்கம் தரக்கூடிய ஆரோக்கியமான வாழ்வின் நிறைவை, நிலையான வாழ்வைக் கண்டடைவோம். சுய விழிப்புணர்வு பெற்ற வர்களாகச் செயற்பட முனைவோம். ஏக்கத்தின் உந்துதலால் எதிர் காலம் அர்த்தம் பெறுகின்றது. இதனால் நாம் நமது வாழ்வின் முழுமையை எய்த முடியும்.

**துணை நின்ற நூல் :-**

*Thomas, T. M., and John B. Chethimattam, Images of man: A Philosophic & Scientific Inquiry: Banga- -lore Dharmaram, Publications 1974*

நாம் அறிவு பெற்றதன் விளைவாக வாழ்வில் மாற்றம் காண போமானால் அதுவே உண்மையான அறிவு -

**அந்தோனி டி மெல்லோ**
" பறவையின் பாடல் " நூலில் இருந்து.

Synopsis

## The Role of Anxiety in Self - Actualization

Soren Kierkegaard, Paul Tillich and Niebuhr in their philosophical endeavour have put foreword the role of anxiety in the process of self-actualization. Their views that are elaborated in this article is very much relevant to our society that undergoes stress and anxiety in the afternath of war.

Man lives in an age of anxiety. The more he is aware of his possibilities, the more he *is* anxious, but it is an ordinary anxiety. Conforming oneself to society may weaken one's self and lead one towards accumulating neurotic anxiety.

Though fear and anxiety are interconnected, yet there is a distinction between them. Fear has an object, but anxiety does not have a clear object.

When a being becomes aware of the possibilities of becoming non-being, man falls into a state of anxiety. This anxiety comes from the paradoxical situation of being both free and bound, both limitless and limited.

Man has great possibilites. In fulfilling these possibilities he comes to know his true self. In this process of actualization of self, anxiety plays a key role in human life. Anxiety helps us to go in search of our possibilities. Faith in the existence of God makes these possibilities achievable. Thus anxiety can enable us to find a hopeful and meaningful future.

**A. A. Amalaraj**

# " வேடங்களையெல்லாம் களைந்து..."

## ' மனித ஆள் ' பற்றிய எண்ணக்கருவிற்கு ஓர் அறிமுகம்

— போல் றொகான்

### உட்புகுமுன்

மனிதர் மட்டுமே ' ஆள் ' (person) என்ற பதத்தினால் அழைக்கப்படக் கூடியவர்கள். ஏனைய உயிரினங்களும், சடப் பொருள்களும் ' ஆள் ' என்ற வரையறைக்குட்பட மாட்டா. ' ஆள் ' என்றது ஒரு விசாலமான (comprehensive) வார்த்தையாகும். படைக்கப்பட்டவைகளில் அல்லது இவ்வுலகுக்குட்பட்டவைகளில் மனிதரை மட்டுமே ' ஆள் ' என்று அழைக்க முடியும்.

இவ்வாறு மனிதருக்கு மட்டுமே உரித்துடையதொன்றான இந்த ' ஆள் ' என்ற பதமும், அது சுட்டி நிற்கின்ற அர்த்தமும், ஆரம்ப காலந்தொட்டு மெய்யியலில் தனி இடத்தையும், செல்வாக்கையும் பெற்றிருக்கின்றது. சிறப்பாகச் சொல்லப் போனால் அடிமை வியாபாரம், அடக்குமுறை ஆட்சிகள், உலகை ஆட்டிவைத்த போர்கள் இவற்றையெல்லாம் கடந்து வந்திருக்கின்ற சமகாலத்தில் இந்த ' ஆள் ' என்ற பதமும் அர்த்தமும் எல்லாருடைய கவனத்தையும் ஈர்க்கின்றதொன்றாக இருக்கின்றது. சுதந்திரத்திற்கான போராட்டங்களும், இரண்டாம் உலகப் போரின் முடிவில் பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமை சாசனமும் சமகால மெய்யியலில் ' ஆள் ' என்ற அர்த்தத்தை பிரகாசமாகத் துலங்கச் செய்தது எனலாம்.

' ஆள் ' என்ற பதம் சமகாலத்தில் மெய்யியல் தவிர்ந்த ஏனைய பல துறைகளிலும் கற்கை நெறியாகவும், ஆராட்சிப் பொருளாகவும், விவாதத்திற்குரிய கருத்தாகவும் இருக்கின்றது. ' ஆள் ' என்றது ஒரு வார்த்தையாக நீண்ட வரலாற்றைக் கொண்டது. இதன் அர்த்தம் பல விவாதக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால் ஒரு மனிதனுக்கு இது பிரயோகப்படுத்தப்படுகின்ற பொழுது அந்த மனிதனை அது ஒரு முழுமையான, நிஜமான, கண்ணியமுள்ள ஒரு பிறவியாக மாற்றுகின்றது. இந்த ' ஆள் ' என்ற பதம் மட்டுமே ஆண் - பெண் என்ற பால் பேதங்களைக் கடந்து மனிதத்துவத்தைக் குறிக்கின்ற ஒரு பொதுச் சொல்லாகும். ஒரு சமகால சினிமாக் கவிஞன் " ஆணென்றும் பெண்ணென்றும்

இரு வார்த்தை ஒன்றாகி ஆள் என்ற ஒரு வார்த்தை உண்டானதே'' என்று பாடும் போது இந்த 'ஆள்' என்ற பதத்தின் பொதுமைத் தன்மையை வெளிக்கொணர்கிறான்.

## மெய்யியலில் 'ஆள்' என்ற எண்ணக்கருவின் தோற்றம்

புராதன கிரேக்க மெய்யியலில் 'ஆள்' என்ற பதம் பாவிக்கப் பட்டாலும் அது இக்காலத்திலே பாவிக்கப்படுவதைப் போல முழு மனிதத்துவத்தையும் குறிக்கின்ற ஒரு சொல்லாக இருக்கவில்லை. கி. பி. 6ம் நூற்றாண்டில் செவரினுஸ் பொயத்தியுஸ் (Severinus Boethius - கி. பி. 480 – 524) என்பவர் 'ஆள்' என்ற பதத்திற்கு முதற் தடவையாக வரைவிலக்கணம் கொடுக்கும் வரை கிரேக்க மெய்யியலில் பாவிக்கப்பட்டதைப் போலவே 'ஆள்' என்ற பதம் வழக்கில் இருந்தது. மனிதனை 'ஆள்' ஆக நோக்குகின்ற தன்மைக்கு கால் கோளிட்டவராக செவரினுஸ் பொயத்தியுஸ் என்பவர் கொள் ளப்படுகின்றார்.

புராதன கிரேக்க மெய்யியலாளர்கள் மனிதரை இயற்கையின் ஒரு பகுதியாக நோக்கினார்கள். ''இயற்கையோடு இரண்டறக் கலந்தவன் மனிதன்; அதேவேளை இயற்கையால் சூழப்பட்டவன் மனிதன்'' என்ற கருத்து பெரும்பான்மையான புராதன கிரேக்க மெய்யியலாளர்களிடம் இருந்தது. எனவே மனிதரை விட இயற்கைக் கும், பிரபஞ்சத்திற்கும் முன்னுரிமை கொடுத்த மெய்யியல் கருத் துக்கள் அவர்களிடமிருந்து எழுந்ததில் வியப்பில்லை. மனிதரைவிட இயற்கையே (பிரபஞ்சம்) விந்தையானது, வியப்பிற்குரியது, மறை பொருள் தன்மை கொண்டது என்று அவர்கள் எண்ணினார்கள். எனவே மனிதனுக்கும் அவன் பிரச்சினைகளுக்கும் அர்த்தம் தேடிய புராதனக் கிரேக்க மெய்யியலாளர்கள் இயற்கை அல்லது பிரபஞ் சத்தை மையமாகக் கொண்ட அணுகுமுறையைப் பயன்படுத்தினர். (cosmocentric approach)

கிறிஸ்தவ சமயத்தின் உதயத்தோடு மேற்கூறப்பட்ட இயற்கை மைய அணுகுமுறை மாற்றமடைந்தது. கிறிஸ்தவத்தின் ஆரம்ப கால கட்டத்தில் ''கடவுள் இயற்கையை வென்றவர். கிறிஸ்து பிரபஞ்சம் முழுவதையும் மீட்டுக் கொண்டவர்'' என்ற கருத்து மேலோங்கி ''வியப்பிற்குரியது இயற்கை அல்ல; கடவுள்தான் மாபெரும் விந்தை - மறைபொருள்'' என்ற கருத்து முன் வைக்கப் பட்டது. இது மத்திய கால (இருண்ட கால) மெய்யியலின் கடவுள் மையக் கோட்பாடுகளுக்கு வழிவகுத்தது. ஆனாலும் கிறிஸ்தவத்தின்

தோற்றத்தோடுதான் மனிதன் சம்பந்தமான புதிய கண்ணோட்டங் களும் பிறந்தன. கடவுள் மையக் கோட்பாட்டின் மறுபக்கமாக மனித மையக் கொள்கை முன்வைக்கப்பட்டது. " மனிதன் கடவுளின் குழந்தை, கடவுளின் சாயலோடு படைக்கப்பட்டவன், இயற்கையை ஆண்டு நடத்தும்படி கடவுளால் பணிக்கப்பட்டவன். " என்ற கருத் துக்கள் கிறிஸ்தவத்தின் விவிலியத்திலே தெளிவாகக் காணப்படுகின் றன. இது மனிதனுடைய மாண்பை உயர்த்துவதாகவும், தனித்து வத்தைப் பறைசாற்றுவதாகவும், அனைத்துப் படைப்பினதும் சிகரத்திற்கு அவனை உயர்த்துவதாகவும் அமைகின்றது. இவ்வாறு கிறிஸ்தவத்தின் வருகையோடு மனிதத்துவம் ஒரு புதுப் பொலிவைப் பெற்றுக் கொண்டது. புராதனக் கிரேக்க சிந்தனையில் டெமோ கிறெற்ரஸ் ( Democrates - கி. மு. 460 - 360 ) என்பவர் " மனிதன் பிரபஞ்சத்தின் ஒரு பகுதி; அதேவேளை மனிதனே ஒரு பிரபஞ்சம் " என்ற கருத்தை முன்வைத்திருந்தாலும், அது மனிதனது தனித்து வத்தையும், மாண்பையும் வலியுறுத்தியதாக அமையவில்லை. இவ் வாறு ' ஆள் ' என்ற பதத்திற்கும், அர்த்தத்திற்கும் கிறிஸ்தவம் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது வெள்ளிடைமலையாகும்.

## 'ஆள்' என்ற வார்த்தைப் பிரயோகம் பற்றிய ஆய்வு

நாம் தமிழ் மொழியில் ஒரு மனிதனைப் பார்த்து ' ஆள் ' என்கின்றோம். ஏனைய பொருட்கள் அல்லது உயிரினங்களை ' அது ' அல்லது ' அவை ' என்கின்றோம். எனவே தமிழிலும் ' ஆள் ' என்ற பதம் மனிதருக்கு மட்டுமே உரிய தனிச் சொத்தாக இருக்கின் றது. ஆங்கிலத்தில் ' ஆள் ' என்றது Person என்ற வார்த்தைகளில் இணைகிறது. ஆங்கில Person என்ற வார்த்தை லத்தீன் மொழியின் Persona என்ற அடிச் சொல்லில் இருந்து பிறக்கின்றது. கிரேக்க மொழியில் இது Prosopon என்ற வார்த்தையால் குறிக்கப்படும். கிரேக்க Prosopon தான் Persona, Person, ' ஆள் ' என்ற வார்த் தைப் பிரயோகங்களுக்கெல்லாம் அடிவேராகும். கிரேக்கர்களுக்கு Prosopon என்ற வார்த்தை ஆரம்பத்தில் முகம் என்ற கருத்தையும், நாளடைவில் நாடகக் கதாபாத்திரங்கள் நாடகத்தின் போது மேடை யில் அணிந்து வரும் முகமூடியையும் குறித்தது. முகமூடி என்றது வேடம் பூணுவதைக் குறிக்கும். நாடகத்தில் நடிப்பவர் தனது சுய வடிவத்தை மறைத்து நாடக மாந்தராகத் தன்னை உருமாற்றிக் கொள்வதற்கு முகமூடி உதவும். ஆகவே செயற்பாட்டளவில் புராத னக் கிரேக்கர்களுக்கு Prosopon ( ஆள் ) என்றது ஒரு நாடக மாந்த ராக வேடம் அணிவதைக் குறித்தது. முகமூடியணிந்து நாடக மாந்த ராக மாறும் நடிகனோ அல்லது நடிகையோ அந்த முகமூடி சுட்டி நிற்கும் முழு ஆளுமையையும் உள்வாங்கி அந்தக் கதாபாத்திர

மாகவே, அதன் முழு ஆளுமையுடனும் ஒன்றிணைவதை அந்த வார்த்தை குறித்தது. சுருக்கமாகச் சொல்லப் போனால் Prosopon அல்லது முகமூடி, முழுவதுமாக நாடகத்தின் கதாபாத்திரமாக மாறுவதைக் குறித்து நின்றது.

பின்னர் கிரேக்கர்கள் இந்த Prosopon என்ற பதத்தை நாளாந்த வாழ்வில் தனி நபர்களைச் சுட்டிக்காட்டப் பயன்படுத்தினார்கள். தனி நபர் ( individual ) என்பவர் யார்? என்ற கேள்வி பிரதானமானதாக அவர்களுக்குத் தோன்றியது. '' இந்தத் தனிநபர் உரிமைகள் உடையவரா? அல்லது கருத்தில் எடுக்காமலே கவனத்தில் இருந்து கழற்றிவிடப்படக் கூடியவரா? '' என்ற பல கேள்விகள் புராதனக் கிரேக்க மெய்யியலாளர்களால் முன்வைக்கப்பட்டன. '' தனிநபர் உரிமைகள் உடையவரே; நிஜ வாழ்வின் உன்னத வெளிப்பாடும், பிரதிபலிப்பும் ஒரு தனி நபரே '' என்று அரிஸ்ரோட்டில் குறிப்பிடுகின்றார்.

இதன் தொடர்ச்சியாகவே ஒரு தனி நபரை ஒரு குடிமகனாக, ஆதாரப் பொருளாக, உரிமைகள் நிறைந்தவராகக் கருதி அவரை Hypostasis என்ற வார்த்தையினால் அழைக்கும் வழக்கம் கிரேக்கரிடையே தோன்றியது.

இவ்வாறு கிரேக்கர்கள் Prosopon என்ற பதத்தை ' தனி ஆள் ' ( individual ) ஆகச் சிந்திக்கத் தொடங்கியதை அடியொற்றி இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளர்கள் ( Stoics ) சமயம் சார்ந்த விளக்கத்தைக் கொடுக்க முற்பட்டார்கள். அவர்களைப் பொறுத்த மட்டில் இவ்வுலகம் ஒரு நாடகமேடை. கடவுளே இந்த நாடகத்தின் இயக்குனர். மனிதர்கள் எல்லோரும் நடிகர்கள். தனி நபர்கள் எல்லோரும் கிரேக்கர்கள் கருதியதைப் போல, ஏதோ ஒரு கதாபாத்திரத்தினுடைய முகமூடியைப் போட்டுக் கொண்டு கடவுள் அமைத்த இந்த மேடையில் ஆட்டம் காட்டுகிறார்கள். ஸ்தொயிக்கர்களினுடைய ( Stoics ) இந்தக் கருத்து தனி மனிதர்களைச் சுதந்திரமற்றவர்களாக, கடவுள் என்ற பொம்மலாட்டக்காரனால் இயக்கப்படுகின்ற பொம்மைகளாக தரம் குறைத்தது என்று சொல்லலாம்.

சட்ட திட்டங்களுக்குப் பெயர் போன உரோமர்கள் தனியாள் ஒருவனை அல்லது ஒருத்தியை சட்டத்தின் கண்ணாடியூடாகப் பார்த்தார்கள். உரோமைய சட்டத்திற்குட்பட்டு அச் சட்டத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரோமைக் குடிமகன் மட்டுமே Persona என்ற அந்தஸ்தைப் பெற்றார். அதாவது உரோமையர்களைப் பொறுத்த மட்டில் உரோமைக் குடிமக்கள் மட்டுமே தனி நபர்கள் அல்லது ' ஆட்கள் '

என்று அழைக்கத் தகுதியுடையவர்கள். அடிமைகளும், உரோமையக் குடிமக்கள் அல்லாதோரும் 'ஆட்கள்' அல்ல. அவர்கள் Non Persona என்று அழைக்கப்பட்டார்கள்.

கிறிஸ்தவ நாகரீகத்தின் வருகையோடு, குறிப்பாக கி. பி. 4ம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் உரோமையர்களின் அரச மதமாக மாறியதோடு மேற்கூறப்பட்ட Prosopon, Hypostasis, Persona, போன்ற பதங்கள் எல்லாம் தெளிவற்ற விதமாய் குறித்து நின்ற தனி ஆள் என்ற கருத்து வேறு ஒரு கோணத்தில் ஆழ்ந்த கருத்தைப் பெற்றுப் புதுப்பொலிவு பெற்றது. கிரேக்க, ஸ்தொயிக்க, உரோமையப் பின்னணிகளில் கொடுக்கப்படாத முழுமையான அர்த்தம் கிறிஸ்தவக் கலாச்சாரத்தினால் கொடுக்கப்பட்டது.

## கிறிஸ்தவ மெய்யியலும் 'ஆள்' என்ற கருத்தின் வளர்ச்சியும்

கிறிஸ்தவத்தின் ஆரம்பத்தில் 'ஆள்' (persona) என்ற பதம் மத நோக்கத்திற்காகவே பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ சமயத்தின் நிறுவுனரான இயேசுக் கிறிஸ்துவைக் கடவுளின் மகனாக, மூவொரு கடவுள் குழுமத்தின் இரண்டாவது ஆளாக விளங்கப்படுத்தவே இந்த 'ஆள்' (persona) என்ற பதம் கிறிஸ்தவத்தால் பாவிக்கப்பட்டது.

நாளடைவில் இறைசாயலைக் கொண்ட மனிதனும் 'ஆள்' என்ற அந்தஸ்தைக் கிறிஸ்தவ விளக்கத்தின்படி பெற்றுக் கொண்டான். ஏனெனில் அவனில் இறைவனிடம் இருந்து வந்த ஆன்மா (soul) குடி கொண்டிருக்கிறது. அதுவே அவனை மற்ற எல்லாப் படைப்புகளையும் விடக் கண்ணியமானதாக, 'ஆளாக' உயர்த்துகிறது என்ற விளக்கத்தை புனித அகுஸ்தீனார் கொடுத்தார்.

பின்னர் 6ம் நூற்றாண்டில் உரோமையில் பிரபல்யமான மெய்யியலாளராக இருந்த செவரினுஸ் பொயத்தியுஸ் என்பார் மனிதனை ஆள் என்று அழைப்பதற்கு உறுதியான, சமயத் தழுவல்களைக் கடந்த ஒரு வரைவிலக்கணத்தைக் கொடுத்தார். அவரது வரைவிலக்கணப்படி 'ஆள்' என்பது "சிந்தனை இயல்புள்ள, இருப்பியல் ரீதியாக உறுதிபெற்ற ஒரு தனி நபராகும்" (naturae rationabilis indiuidua substantia). இந்த வரைவிலக்கணத்தின் மூலமாக 'ஆள்' என்பவர் மூன்று முக்கிய பண்புகளைக் கொண்டவராகக் காட்டப்படுகின்றார்.

1. சிந்திக்கக் கூடியவர் ; இது சுதந்திரமாக, மற்றவர்களினுடைய பாதிப்புக்கு உட்படாமல் சுயமாக சிந்தித்து முடிவுகளை எடுக்கக் கூடிய தன்மையைக் குறிக்கிறது.

2. இருப்பியல் ரீதியாக உறுதி பெற்றவர் : இது ஒருவர் தனது இருத்தலை உறுதியாகக் கொண்டிருக்கிற தன்மையைக் குறிக்கிறது. அவர் தனது இருப்பிற்கு ( existence ) மற்றொனறில் தங்கியிருப்பவர் அல்ல. அவரது இருப்பு அவரது உட்பொருளாக அல்லது அடிநிலைப் பொருளாக ( substance ) அமைகிறது. ஆள் என்பவர் மற்றொன்றிலே தங்கியிருக்கின்ற தடத்தனமானவர் ( accident ) அல்ல,

3. தனி நபர் : ' ஆள் ' என்ற பதம், ' மனிதன் ' என்ற உலகளாவிய எண்ணக் கருவின் தனிப்பட்ட அலகைக் ( particular unit ) குறிப்பதாகும். '' மனிதன் '' என்ற பதம் உலகிலுள்ள எல்லா மனிதரையும் குறிக்கிறது. அது ஓர் உலகளாவிய பொதுச் சொல். அது ஓர் எண்ணக்கரு மட்டுமே. எனவே ' மனிதன் ' என்ற ஒருவரை நாம் காண முடியாது. ஆனால் ' மனிதன் ' என்ற எண்ணக்கரு தனி நபர்களிலே தனித்துவமாக்கப்படுகின்ற பொழுது அங்கே 'ஆள்' (person) தோன்றுகின்றார். ' ஆள் ' பார்க்கப்படக் கூடியவர். புலன்களுக்கு எட்டியவர். உறவு கொள்ளக் கூடியவர். எனவே தனி நபர்களை அல்லது ' ஆள் ' களை நாம் கண்டு, கேட்டு உணர்ந்து அறிந்து கொள்கின்றோம். இந்த ' ஆள் ' ஒரு குறிப்பிட்ட, காலவரையறைக்குட்பட்ட, தனித்துவமான ஒரு மனிதரைச் சுட்டி நிற்பதால் ஒரு குறிப்பிட்ட ஆளைப் போல வேறு எவரையும் நாம் கண்டு, கேட்டு, உணர முடியாது. இதுவே ' ஆள் ' தன்மையிலிருக்கின்ற தனித்துவமாகும். எனவே ' ஆள் ' தனி நபராக மாறுகின்றார்.

இவ்வாறு பொயத்தியுஸ் ' ஆள் ' என்பதற்கு கொடுத்த வரைவிலக்கணம் மெய்யியல் வரலாற்றிலேயே மிகச் சிறப்பான, தனி மனிதர்களது மாண்பு, கண்ணியம், தனித்துவத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்ற ஓர் ஆவணமாகும்.

## இன்றைய உலகில் ' ஆள் '

மனித வரலாற்றில் பலவிதமான, வேறுபட்ட காலங்களைக் கடந்து நாங்கள் இன்று இருபத்தோராவது நூற்றாண்டை அடைந்துள்ளோம். இதுவரை காலமும் தோன்றி மறைந்த நாகரீகங்

கள் அல்லது வல்லரசுகள் ஏதோ ஒரு விதத்தில் மனித சமுதாயம் மனிதத்துவத்துடன் வாழ்வதற்கான வழிமுறைகளுக்கு இட்டுச் சென்றிருக்கின்றன; அதேவேளை மனிதத்துவத்தை அழிக்கின்ற கைங் கரியங்களிலும் ஈடுபட்டு இருக்கின்றன.

பல நூற்றுக்கணக்கான ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், மனித உரிமை சாசனங்கள் இதுவரை காலமும் மனிதத்துவத்தை வளர்ப்ப தற்காகச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயினும் இன்றைய உலகு மனிதத்துவத்தை வளர்க்கின்ற புதிய நாகரீகப் பாதையில் இன்னும் எவ்வளவோ தூரம் முன்னேற வேண்டியிருக்கிறது.

மனிதர் ' ஆள் ' ஆக மாறுகின்ற போது அல்லது மதிக்கப்படு கின்ற போதுதான் உலகம் இந்தப் புதிய நாகரீகத்தை நோக்கி வளரலாம். உலக மயமாக்கல் கொள்கைகளும், திறந்த பொருளா தார முறைமைகளும், நுகர்வுக் கலாச்சாரமும் ' ஆள் ' என்ற தனித்துவம் மிக்க மனிதத்துவத்தை நசித்து ' ஆளை ' ' அது ' வாக, சடப்பொருளாகக் கணிக்கின்ற தன்மைக்கு இட்டுச் சென்றிருக்கின் றன. ' ஆளை ' விடப் பொருட்களுக்கும், பணத்திற்கும், பதவி பட்டங்களுக்கும் உயர்ந்த இடம் கொடுக்கின்ற தன்மையை உருவாக்கி யிருக்கின்றன. பணத்திற்காக, பதவிக்காக, பட்டத்திற்காக எதை யும் செய்யலாம் என்னும் நிலையைத் தோற்றுவித்திருக்கின்றன.

இந்நிலையில் ' ஆள் ' என்ற எண்ணக்கரு, அதற்குக் கொடுக்கப் பட்ட உன்னத வரைவிலக்கணம் மீண்டும் புத்துயிர் பெறுவது இன்றி யமையாததாகும். வரைவிலக்கணப்படி ' ஆள் ' சுயமாகச் சிந்தித்து, சுதந்திரமாக முடிவுகளை எடுப்பவர். தனது சொந்தக் காலில் நிற்ப வர். அவரது இருப்பு வேறொன்றில் அல்லது வேறொருவரில் தங்கி யிருக்கும் ஒட்டுண்ணி இருப்பு அல்ல. அவர் தனித்துவமுள்ளவர். அவர் தன்னைப் போல மற்றவர்களையும் ' ஆள் ' களாக மதிப்பவர். அவரது இருப்பு உறுதியானதாய் இருப்பதால் கணத்திற்குக் கணம் அலைக்கழிக்கப்படுபவர் அல்ல. சுயமாகச் சிந்தித்து, சுதந்திரமான முடிவுகளை எடுப்பதால் அவர் தனது கருத்துக்களை அல்லது முடிவு களை அடிக்கடி மாற்ற மாட்டார். அவர் சுயமாகச் சிந்திக்கும் தனி நபராக இருப்பதால் பணத்தினாலோ, பட்டம் பதவியினாலோ வாங் கப்பட முடியாதவராக இருக்கின்றார்.

புராதன கிரேக்கர் கருதியதைப் போல முகமூடி அணிந்து மேடையில் வேடம் பூணுபவர் தனக்குரிய பாத்திரத்தை நிறைவு செய்து அந்தப் பாத்திரத்திற்கு உயிரூட்டுகின்றார். இன்று தனி நபரைப் பற்றியும், ' ஆள் ' பற்றியும் புதிய எண்ணங்களும், வரை

யறைகளும் எழுந்துள்ள நிலையில் இந்த 'ஆள்' என்பவர் வேடம் அணிந்து இன்னொன்று போல அல்லது இன்னொருவர் போல நடிப்ப வர் அல்ல. மாறாக தனது சுய சிந்தனையுடன் சொந்தக்காலில் நின்று, தனது சொந்த இருப்பினைப் பூரணப்படுத்துபவராகத் தனது தனித்துவத்தையும், தன்மானத்தையும், பேணுபவராக இருக்க வேண்டியவர். இந்த தனது உயரிய பண்பையும், பொறுப்புக்களை யும், நிறைவேற்றாது உதாசீனம் செய்பவரும் 'ஆள்' அல்லர். அதேவேளை மற்றவர்களை இந்த 'ஆள்' தன்மையுடன் வாழ விடாது, 'அது' போன்று எண்ணுபவரும் 'ஆள்' அல்லர்.

வேடங்கள் அல்லது முகமூடிகள் எல்லாம் களையப்பட்டு மனிதர் 'ஆள்' ஆக வாழவேண்டிய புதிய நாகரீகத்தை கட்டியெழுப்பு கின்ற பொழுதுதான், மனிதத்துவம் நிறைந்த தன்மானமுள்ள தனி நபர்களாக நாம் மாற முடியும் வேடங்களை எல்லாம் களைந்து 'ஆள்' ஆக மாறுவோம்; 'ஆள்' ஆக மற்றவரையும் மதிப்போம்.

Synopsis :

## Beyond all Facades...

## An Introduction to the Concept of 'Human Person'

We all identify ourselves as persons apart from other kinds of entities. Among the finite creatures, the term person is applied only to human beings. It is a comprehensive name which expresses the entire reality of man's being.

The concept of person is central to philosophy and virtually it has been treated all along in the history of philosophy. Our epoch, more than any other, sees at the centre of history the human person. The explosion of the freedom of rights of the human person, proclaimed in a solemn document after the Second World War, are its most eloquent testimonials.

The theme of person has become the subject matter for many branches of study. "As a term it has a long history. As a concept it has had many

problematic nuances. But when applied to the human being it makes him more human, more complete and more real."

Ancient Greek philosophers emphasized the importance of human being in nature They considered human reality as a being surrounded by nature and had more attention on the cosmos than on human reality.

With the Christian religion a new world vision was opened. Christianity no longer looked to the world and nature as mysteries but as something conquered and redeemed by Christ. A new philosophical approach based on the Christian religion began to develop a new vision. This vision influenced the outlook on human being as well. It revitalized the anthropocentric approach to the realities basing itself on theocentrism. Human being is unique not only because it is the microcosm in the macrocosm; not only because it has special place in nature and has superiority among the animals; but according to the Christian metaphysical tradition, it is unique also because of the endowment of the immortal rational soul and its being created in the image of God. All these aspects prove the uniqueness of humanity. Now we use the term person to differentiate an individual human being from other creatures. The term person in English is derived from the Latin *persona*. This *persona* is also traceable to the Greek *prosopon*. Its first meaning is 'face' and *prosopon* was originally used in the Greek theatre to denote the made - up faces or the masks or the facades worn by an actor. Later, the term indicated the individual

actor who put on the mask. To the understanding of the Greeks, the Stoics were trying to give a religious significance. They said that this world is a stage set by God and each man has a role to play on that stage.

Among the Romans, the *persona* had a juridical sense. *Persona* expressed a kind of dignity, which is recognized by the law. Romans identified *persona* with the legal rights, that is, the Roman citizen. For them the slave or a non-Roman citizen is *non-persona*.

Any philosophical study on person will be incomplete if Severinus Boethius (A. D 480-524) is left out. His definition of person is called the classical one. Boethius defines person as follows: "The individual substance of a rational nature" (*naturae rationabilis indiuidua substantia*.) The definition of Boethius brings out well, that person means not mere individuality, not mere nature or not mere substance. But person is constituted together with these elements and with the rationality which is the distinguishing mark of the human beings. The first definition on person provides a solid conceptual root to the new humanism, that is, to view man as a person.

In the contemporary society, there is a serious invitation for us all, to become 'persons' beyond all the facades and the old shades of meanings. We have to become 'persons' and allow others also to be 'persons'. Are we ready to accept this invitation and to contribute to the construction of the new humanism in our society?

## Bibilography

*BOETHIUS, The Theological tractates, trans. H. F. Steward and E. K. Rand, London : William Heinemann Ltd-, 1926.*

*MONDIN, B., Antropologia filosofica, L'uomo : Un progetto impossibile?, Roma: Urbaniana University Press, 1983.*

*MOUNIER, E., Personalism, trans. P. Mairet, Notre Dame : University of Notre Dame Press, 1952.*

*TISCHNER, J., ed., The Philosophy of Person, Washington : Paidea, 1994.*

*GARRETT, B., " Persons, " in Routledge - Encyclopaedia of Philosophy, ed., Edward Craig, 10 vols. vol. VII, New York : Routledge, 1998, pp. 318 - 321.*

*DE SMET, R., " The Discovery of the Person, " Indian Philosophical Quarterly, 4 ( Oct. 1976 ) 1. pp. 1-9*

" மனிதர்கள் எந்த எண்ணம் அல்லது சிந்தனை அவமானகரமானது என்று கருதி மனதுள் அடக்கி விட நினைக்கிறார்களோ அந்த எண்ணம் அல்லது சிந்தனை எவ்வாறாவது வெளிப்படத் துடிக்கிறது. நேரடியாக வெளிப்பட முடியாத போது வேறு ஒரு விதத்தில் வெளிப்படுகிறது; அல்லது ஏதாவது மாறு வேடம் போட்டுக் கொண்டு வெளிப்படுகிறது; இது கனவுகளின் மூலமாகவும் நடைபெறலாம் "

— ஃபிராய்ட்

" பலவீனர்களின் பாதையில் தடையாக இருந்த கருங் கல் பாறை பலசாலிகளின் பாதையில் படிக்கட்டாக அமைகிறது "

ஜெர்மனிய கவிஞன் கதே

# பகுப்பாய்வு மெய்யியலாளர் பார்வையில் மெய்யியல்

— மேரி சுஜந்தினி

## உட்புகுமுன்

மனித வரலாற்றிலே மெய்யியல் முக்கிய இடத்தை வகிக்கின்கிறது. இன்றைய நவீன வளர்ச்சிக்கு ஆதிக் கிரேக்கர் காலம் முதல் சம காலம் வரையிலான மெய்யியலாளர்களின் ஆய்வுப் படிமுறைகள் பெரிதும் துணை செய்துள்ளன.

மெய்யியல் என்றால் என்ன? என்பதற்கு தெளிவான விரைவிலக்கணம் கூறுவது கடினம். பலர் பல கோணத்திலே மெய்யியலை நோக்குகின்றனர். '' இருப்பு ( being ) பற்றியும். மனித சிந்தனை ( rationality ) பற்றியும், அறிவின் வளர்ச்சிப் போக்கு ( epistemology) பற்றியும் பொது விதிகளைத் தரும் விஞ்ஞானம் '' என்று மெய்யியலுக்குக் கொடுக்கும் வரையறுப்புத் தெளிவானதாக இல்லை. 'மெய்யியல்' என்னும் பதம் ' philosophia ' என்னும் கிரேக்க சொல்லில் இருந்து பெறப்படுகின்றது. ' philo ' என்பது விருப்பம் அல்லது நேயம் என்னும் பொருள்படும். ' sophia ' என்பதற்கு ஞானம் என்று பொருள். ஆகவே ' philosophia ' என்றால் ' ஞானத்தில் விருப்பு ' அல்லது ' ஞான நேயம் ' என்று பொருள்படுகின்றது. மேலும் சொல்லிலக்கணப் பிரயோகப்படி ' philosophia ' என்பது ஒருவருடைய புதுமை நாட்டத்தையும், நுண்ணறிவையும் பிரயோகிப்பதற்கான விருப்பு என்று கொள்ளப்படுகின்றது. அத்துடன் ' உண்மை பற்றி ஆராய்தல் ' ' உண்மையை நோக்கிய தேடல் ' என்ற விளக்கங்களும் மெய்யியலுக்குக் கொடுக்கப்படுகின்றன. ( 'மெய்' என்றால் உண்மை; ' இயல் ' என்றால் அறிவு சம்பந்தமான ஆராட்சி. ஆகவே ' மெய்யியல்' என்பது உண்மை நோக்கிய அறிவாராட்சி )

மெய்யியல் காலத்துக்கேற்ப மாறி வருகின்ற அறிவின் பரிமாணங்களை ஆராட்சிக்குட்படுத்தி உண்மையைத் தேடி நிற்கின்றது. கிரேக்க காலத்தில் பிரபஞ்சத்தை மையமாகவும், மத்திய காலத்தில் கடவுளை மையமாகவும், நவீன காலத்தில் மனிதரது சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட அறிவு முதல் வாதத்தை மையமாகவும் கொண்டு அறிவுத் தேடலை நிகழ்த்தியது. சம காலத்தில், '' மெய்யியலில் மாற்றமடையாதது எதுவுமில்லை; மாறக் கூடியவைகள் அனைத்தும் சார்புடையன '' ( relative ) என்ற கருத்துக்கள் வலுப்

பெற்றுள்ளன. இந்திய மெய்யியல் ஆதிகாலம் தொட்டு ஆன்ம விடுதலைக்கான, முக்திக்கான மார்க்கங்களை வலியுறுத்தும் களஞ்சியமாக அமைந்திருக்கின்றது.

## மெய்யியலும் மொழி ஆராட்சியியலும்

பகுப்பாய்வு மெய்யியலாளர் உண்மையைத் தேடுவதற்குப் பயன் படுத்தப்படும் தனித்துவமான மனித ஊடகமான மொழியிலே தங்கள் கவனத்தைச் செலுத்தினர். ஏனென்றால் மனிதருக்குத் தமது எண்ணங்களையும், கருத்துக்களையும் காத்திரமான முறையில் வெளிப்படுத்துவதற்கு மொழியைப் போன்ற வேறு ஒரு கருவி அல்லது ஊடகம் இல்லை. உண்மையை மொழியின் ஊடாகவே விளக்க முடியும். மொழியின் ஊடான இந்தத் தொடர்பாடலிலே அல்லது உறவாடலிலே கருத்துப் பிரச்சனைகளும், அர்த்தக் குழறு படிகளும் ஏற்படுவது அனுபவத்திலே கண்ட ஒன்றாகும். எனவே மனித மொழி சிக்கல் நிறைந்த சாதனமாக அல்லது ஊடகமாக இருப்பதாகப் பகுப்பாய்வு மெய்யியலாளர் கருதினர்.

மெய்யியலில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு மொழியின் பாவனையில் ஏற்படும் குழப்பமே காரணம் எனவும், மொழியின் பாவனையில் உள்ள குழப்பங்களை நீக்குதல் மூலம் மெய்யியலை நன்கு விளங்கிக் கொள்ளலாம் என்ற புதிய பாதை ஒன்றைப் பகுப்பாய்வு மெய்யியலாளர் ஆரம்பித்தனர். ''போத்தலினுள் அகப்பட்ட ஈ அதனின்று வெளியேறுவதற்கான வழியை நோக்குவது போல, மொழி வலையில் விழுந்த மெய்யியலாளர்கள் அதனின்று வெளியேற வேண்டும்; அதற்கு மொழியினைப் பகுப்பாய்வு செய்தல் அவசியம்'' என்று இவர்கள் கருதினர். விற்கின்ஸ்ரைன் ( Wittgenstein ) எனப்படும் பகுப்பாய்வு மெய்யியலாளர் மெய்யியல் பிரச்சனைகளுக்கு மொழியின் பயன்பாட்டை அறியாததே காரணம் எனவும், அதனாலேயே அர்த்தக் குழறுபடிகள் ஏற்படுகிறது எனவும் கூறியதோடு, 'பயன்வழி அர்த்தக் கோட்பாட்டையும்' முன்வைத்தார். இதை அடியொற்றி இருபதாம் நூற்றாண்டின் பகுப்பாய்வு மெய்யியலாளர் ''உண்மையைக் கண்டறிதலும், அர்த்தத்தைத் தெளிவுபடுத்தலுமே மெய்யியல்'' என மெய்யியலுக்கு வரைவிலக்கணம் கொடுக்க முனைந்தனர்.

## மெய்யியலும் புதிய தர்க்கப் புலனறிவாதமும்

மொழியின் அர்த்தத்தைத் தெளிவுபடுத்தப் புறப்பட்ட பகுப்பாய்வு மெய்யியலாளர்களின் கைங்கரியம் 'புதிய தர்க்கப் புலனறிவாதமாக' ( neo positivism ) வளர்ச்சியடைந்தது. இவர்கள் கருத்

தற்ற கூற்றுக்களே மெய்யியல் பிரச்சனைகளுக்குக் காரணம் எனக் கூறி, அனைத்திற்கும் அடிப்படையான மொழியை விளக்குவது மெய்யியலின் தலையாய கடமை என்றனர்.

ஜீ. ஈ. மூர் ( G. E. Moore ), பேட்ரன்ட் ரசல் (Bertrand Russell) ஆகியோரின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த பகுப்பாய்வு மெய்யியலும் அதன் கிளையான புதிய தர்க்கப் புலனறிவாதமும், முன்னைய காலத்தைப் போல உலகைப் புரிந்து கொள்ள முயற்சி செய்தன. ஆனால் இந்த முயற்சி உலகத்தைப் பற்றி மொழியின் உரையாடலின் அடிப்படையிலே அமைந்திருந்தது. எனவே உலகை, உலகின் யதார்த்தங்களைப் புரிந்து கொள்ள மொழியின் பகுப்பாய்வை அடிப்படையானதாக்க மேற்கூறப்பட்ட மெய்யியல் சிந்தனைகள் முயன்றன. ஆனாலும் இவைகளின் முயற்சியும் மெய்யியல் வரலாற்றில், ஏனைய பாரம்பரிய மெய்யியல் சிந்தனைகளின் தொடர் முயற்சியாகவே இனங்காணப் படுகின்றன.

பகுப்பாய்வு மெய்யியலாளரான விற்கின்ஸ்ரைன் என்ற அறிஞரின் பிற்பட்ட சிந்தனையோடு.[1] பேட்ரன்ட் ரசலின் சிந்தனையும் இணைந்து 1914 – 1919 க்கு இடைப்பட்ட காலத்தில் செயற்கை மொழி ஒன்றை உலகிற்குத் தோற்றுவிக்க ஏற்பாடுகள் நடந்தன. இது ' தர்க்க அணுவாதமாக ' ( logical atomism ) உருவெடுத்தது. தர்க்க அணுவாதிகள் உருவாக்க முனைந்த செயற்கை மொழியில், '' சொற் தொடரியலானது உலகையும், அதன் அமைப்பையும் பிரதிபலிக்கும் '' என்ற நம்பிக்கை எதிரொலித்தது. ' புதிய தர்க்கப் புலனறிவாதிகள் ' நியம மொழி பற்றிய அக்கறை உடையவர்களாக இருந்த பொழுதிலும் பின்னைய விற்கின்ஸ்ரைனின் சிந்தனையில், மொழி பற்றிய சிந்தனையில் சிறிது மாற்றம் தென்பட்டது. இவர்கள் மொழியின் பிரயோகத்துக்குள் பௌதீகத்தை உள்ளடக்காமல், விஞ்ஞான ஆராட்சிக்குரிய நியம மொழி ஒன்றைக் கட்டியெழுப்புவதில் ஆர்வமுடையவராய் இருந்தனர். ஆனால் சில ' புதிய தர்க்கப் புலனறிவாதிகள் ' மெய்யியல் ஆய்வுக்குச் சாதாரண மொழியைய உட்படுத்துவதில் ஆர்வம் காட்டினர்.

---

[1] பகுப்பாய்வு மெய்யியலாளரான விற்கின்ஸ்ரைனின் ( Wittgenstein ) இரண்டு விதமான கருத்துப் போக்குகளை நாம் இனங்காணலாம். அவரது முதல் நூலான Tractatus Logico – Philosophicus மொழியின் முற்று முழுதான இயலாத்தன்மையை கூறி நிற்கிறது. அவரது இரண்டாவது நூலான Philosophical Investigations மொழியின் சில சொற்களுக்குரிய அர்த்தத்தையும், அவற்றின் பயன்பாட்டையும் வலியுறுத்துகின்றது.

இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானமானது, அதனது அதீத வளர்ச்சியின் காரணமாக பழைய கருத்துக்கள், சிந்தனைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் என்ற கருத்து நிலவியது. ஆனால் பெரும்பாலான பகுப்பாய்வு மெய்யியலாளர்கள் ''மெய்யியலின் தொழில் அறிவைப் பெறுவது அல்ல'' என்றும் ''சிந்திப்பதற்கு அடிப்படையான மொழியின் செயற்பாட்டினைச் செம்மைப்படுத்து வதே மெய்யியலின் பணி'' என்றும் விளக்கினர். மனித சிந்தனை மொழியின்றிச் சிறப்படைவது அசாத்தியம் என்ற வகையில் புனரமைக் கப்பட்ட மொழியின் தேவை பெரிதும் உணரப்பட்டது. மொழி தெளிவற்று, குழப்பமானதாக இருப்பதனாலேயே அது தெளிவு படுத்தப்பட்டுப் புனரமைக்கப்படுவதற்கு மெய்யியலின் பங்களிப்பு வேண்டப்பட்டு நின்றது. பகுப்பாய்வு மெய்யியலாளர்களும், புதிய தர்க்கப் புலனறிவாதிகளும், தர்க்க அணுவாதிகளும் கொடுத்த விளக்கங்களின் விளைவாக மெய்யியல் பற்றிய புதிய விளக்கம் தோன்றியது: ''மெய்யியல் என்பது மொழியின் தர்க்கப் பகுப் பாய்வும், சொற்கள், கருத்துக்களை ஆராய்ந்தறிதலுமாகும்.''

ஆகவே மெய்யியலினதோ, மெய்யியலாளர்களினதோ பணி பிரச்சனைகளுக்கான தீர்ப்புகளை வழங்குவது அல்ல; மாறாகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழி வகைகளைத் திறந்து விடுத லாகும் என்ற கருத்து மிகத் தெளிவாக முன்வைக்கப்படுகின்றது. இதை அடியொற்றியே மெய்யியலில் மொழியின் பங்களிப்பும், மொழி யின் பகுப்பாய்வும் அவசியமான ஆராட்சிகளாக முன்வைக்கப்பட்டன.

Synopsis :

## 'Philosophy' – As Viewed by the Analytic Philosophers

**L. Mercy Sujanthini**

Philosophy plays an important role in the history of humankind. Various philosophers from the ancient Greek period up to now have contributed considerably to the development of human civilization.

It is difficult to give a clear-cut definition of philosophy. Etymologically the word philosophy is

derived from the Greek word *'philosophia'*. 'Sophia' means wisdom and *'philo'* is love or desire. Hence, the etymological meaning of philosophy is love of wisdom or desire for wisdom.

The ancient Greek philosophers were in search of the nature of the reality and they had the Cosmo-centric perspective for every research. The philosophers in the middle ages had the Theo-centric perspective. Contemporary philosophy has undertaken various perspectives in order to achieve its search for truth. Indian philosophy has always been very much concerned with the ways and means for spiritual liberation and union with the absolute.

Analytic philosophers are concerned with the language and its analysis, because, they think that all the problems and confusions in philosophy are due to the inadeqacy of the language. The inadequancy of the language makes the users to play many language games. Language games ultimately refer to the linguistic problems.

According to the analytic or linguistic philosophers, the task of philosophy is to clarify the meaning of the language and as a result philosophy must discover the truth that is hidden in the language. Such consideration resulted in the philosophical doctrines like neo-positivism and logical atomism. Witgenstein and Bertrand Russel tried to create an artifical language. This is basically for the linguistic analysis or for the critical analysis of the language. These philosophers ascertain that the work of philosophy is not meant to acquire knowledge, but to regulate the proper use

of language. In other words, philosophy is the critical analysis of the language and its meaning. From the analytic philosophers we learn that the work of philosophy or philosophers is not to give judgments to the problems but to show the ways and means to solve the problems.

கல்வியின் நோக்கம் . . . .

ஒருவன் தன்னைப் பற்றிச் சிந்திப்பதற்கும் தன்னைத் தானே அறிவதற்கும் கல்வி வழி வகுக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே அறிய வேண்டுமென்று சோக்கிரட்டீஸ் கூறுகிறார். ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே அறிவதற்குரிய கருவிகளாகக் கல்வியும் தத்துவமும் செயற்படுகின்றன என்பது சோக்கிரட்டீசின் கொள்கை. ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தான் அறியும் போது சோதிமயமான பூரணத்துவத்தை அடைய வழி பிறக்கின்றது. ஜே. எஸ். மில்ஸ் என்னும் கல்வியியல் அறிஞர் கூற்றுப்படி, நாம் பூரணத்துவத்தை அடையும் நிலை முழுமையாக நிறைவேற்றப்படாத நிலையிலும், எம்மைப் பூரணத்துவத்திற்கு அண்மையில் கொண்டு செல்வது கல்வி ஆகும்.

நன்றி ;

' விழுமியக் கல்வி ' - ஞானமுத்து பிலேந்திரன்
பக். 5

# பொருண்மிய மனிதன் (Homo Economicus)

## என்ற கருத்தியல் பின்னணியில் நவீனத்துவம் பற்றிய சில குறிப்புகள்

**சா. பி. கிருபானந்தன்**

மூன்றாவது மிலேனியத்தில் அமெரிக்க தன்னாதிக்க வல்லரசின் பாதுகாப்பு ஒழுங்கமைவின் பொருளாதார, இராணுவச் சின்னங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் உருவான அவலமும் அழிவுகளும், பனிப்போரின் பின் உருவான வல்லாதிக்கத்தை நிலைகுலையச் செய்தன. நீண்டகால நீதி வழங்க சூழுரைத்த அமெரிக்கா, "இறுதித் தீர்ப்பு கடவுளுடையது" என்ற முதுபெரும் தந்தை ஆபிராகாமின் வழிவரும் இறைமக்களின் நம்பிக்கை கூட மாற்றம் காண தூண்டியது. "அல்லாகு அக்பர்" அன்றி "அமெரிக்காகு அக்பர்" அல்ல. அப்கானிஸ்தானில் தொடங்கிய பயங்காரவாத தேடல் இன்று ஈராக் தொடங்கி மற்றைய நாடுகளுக்கும் பரவிவருவதைக்காணலாம். பின்நவீனத்துவகாலத்தில் முதல்தடவையாக போர் முதாலாம் உலகத்தின் கதவுகளைத் தட்ட தொடங்கியுள்ளது. மூன்றாவது உலக மகா யுத்தம் உருவாகுமா என பலர் பல்வேறு அபிப்பிராயங்கள் தெரிவித்தபோதிலும் எல் சல்வடோர் இறையியலாளர் யேன் சொபரீனே குறிப்பிட்டுள்ளது கவனத்துக்குரியது. "மூன்றாவது உலக மகா யுத்தம் உருவாகாவிட்டாலும் மூன்றாவது உலக நாடுகளில் நடாத்தப்பட்ட யுத்தத்தினால் உருவான மனித அழிவுகள் பாரியவை."

பனிப்போர் (Cold War) முடிவுற்றதன் வரலாற்று அடையாளாமாக பெர்லின் சுவர் விழுகையைக் கருத்தில் கொண்டால் 2ம் உலகப் போரின் பின் உருவான இருபக்க முனைவாக்கம் பெற்ற பாதுகாப்பு ஒழுங்கிலிருந்து, 21ம் நூற்றாண்டில் தனி மையமாக ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்பு ஒழுங்கமைப்பு முன்வைக்கப் படுகின்றது. பல வரலாற்று ஆசிரியர்கள் பனிப்போர் முடிவுற்றதை பின்நவீனத்துவதின் ஆரம்பமாகக் கொள்வர். தோமஸ் சி. ஓடன் தனது நூலான "இரு உலகம்" என்பதில் இவ்வாறு வர்ணிக்கிறார்; "பிரஞ்சுப்புரட்சியிலிருந்து, கம்யூனிசத்தின் வீழ்ச்சி மட்டும் இடைப்பட்ட 1789 தொடக்கம் 1989 வரையிலான நவீனத்துவ யுகத்தின் 200 ஆண்டு காலக்கட்டத்தை தற்போது தெளிவாக வகுக்கலாம். இவ்வகையான வரலாற்று காலங்களை தேதியிடுவது விவாதத்துக்குரியதே. இருப்பினும் அர்த்தமுள்ள ஆரம்பப்புள்ளியாக 'பஸ்ரில்' கோட்டையின்

தாக்குதலும், பின்னர் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் பெர்லின் சுவர் விழுகையும் உள்ளது." (நீண்ட பெர்லின் சுவர் ஒரு குறியீடு)

## நவீனத்துவம்: வரையறையற்ற சுதந்திரம்

மேற்கத்தைய வரலாறு பொதுவாக தொடக்காலம், மத்திய காலம், நவீனகாலம் என்று மூன்று காலக்கட்டமாக பிரிக்கப்படும். பலநூற்றாண்டுகளான வரலாற்று ஓட்டத்தை விளங்கிக்கொள்ள பொருத்தமான பிரிவாக இது அமைந்துள்ளது. நவீன காலம் எனக் குறிப்பிடப்படுவது மத்திய காலத்திலிருந்து தொடர்வதாகும். இக்காலக்கட்டத்தில் விஞ்ஞானத்தின் அதிகார வளர்ச்சியையும், திருச்சபையின் அதிகார வீழ்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட இரு அம்சங்களைப் பார்க்கலாம். ஆங்கில மெய்யிலாளார் பேட்ரண்ட் ரசல் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: "நவீனகாலம் என வரலாற்றில் பொதுவாக குறிப்பிட்டுள்ள காலம், மத்திய காலத்தைவிட கண்ணோட்டத்தில் பலவற்றிலும் வேறுபட்டது. இவற்றில் இரண்டு முக்கியமானவைகள்: திருச்சபையின் அதிகாரத்தில் ஏற்பட்ட இறங்குமுகமும், விஞ்ஞான அறிவுபூர்வ அதிகாரத்தின் எழுச்சியுமாகும். இவை இரண்டோடும் மற்றவைகள் இணைந்துள்ளன. நவீனகாலத்தின் பண்பாடு குருக்கள்தன்மையில்லாமல் பொதுநிலைப் பண்பாடாக மாற, அனைத்தையும் மட்டுப்படுத்தும் காரணியான திருச்சபையை நாடு ஈடுசெய்தது."

மத்தியகாலத்திலிருந்து நவீனத்துவம் என்ற வராலாற்றுப் பாய்ச்சலின் முடிவுப்புள்ளியாக சீர்திருத்த வாதத்தை வுல்பாட் பானன்பேர்க் என்னும் இறையியலாளர் குறிப்பிட்டுள்ளார். சீர்திருத்தவாதம் நவீன உலகமய பண்பாட்டுக்கு வழிசமைத்தது என பல வரலாற்று ஆசிரியர்கள் கொள்வர். தமது "மெய்யியல் வரலாறு" என்னும் நூலில் புல்லர், மக்பிராயன் என்னும் ஆசிரியர்கள், சீர்திருத்தவாதமே கிறிஸ்தவ கோட்பாட்டின் ஆயிரமாண்டுகாலப் பிடியிலிருந்து மெய்யிலை மீள்படுத்தியாக குறிப்பிடுவர். மக்ஸ் வெபர் என்னும் பிரபல சமூகவியலாளரின் கருத்துப்படி "கல்வினிய" அறநெறியில் காணப்பட்ட கட்டுப்பாடான வாழ்க்கைமுறைதான் முதலாளித்துவ எழுச்சிக்கு நவீன உலகில் வழிசமைத்தது. பொருண்மிய திட்டமிடல்களும் கோட்பாடுகளும் தனியான ஆள்பற்றிய (individual) வரையறையை கொண்டிருந்ததன்றி மனித ஆள்தன்மையை (person) கருத்தில் இருத்தவில்லை. பொருளாதர வளர்ச்சிகள் தேசிய கூட்டுப்புள்ளியாக கணிக்கப்பட்டதே தவிர மனித அபிவிருத்தியாகக் கணிக்கப்படவில்லை.

## காட்டேசியன் இருமை

நவீன பொருளியலின் தந்தை என வர்ணிக்கப்படும் அடம் சிமித்தின் பொருளாதார சிந்தனையில் காட்டேசியன் வாதம் ஊடுருவியுள்ளதை கெர்மன் டலி, யோன் கொப் என்போர் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றனர். "காட்டேசியன் உலகக்கண்ணோட்டம் பொருளாதர சிந்தனைக்கு ஏற்ற சூழலையும் தளத்தையும் வழங்கியது என்பது கண்கூடு. சுருக்கமாகக் குறிப்பிட்டால் நவீன இருமைவாதம், அடம் சிமித் தொடங்கி இன்றைய பொருண்மிய கோட்பாடுகள்வரை தோன்றுகிறது. காட்டேசியன் இருமை மனித யதார்த்தத்தில் மனம், பொருள் என இரு முனைவாக்கம் செய்தது." கிறிஸ்தவ ஆன்மீகத்திலும் உடல் வேறு ஆன்மா வேறு என பிளவுபட்ட நிலையை அவதானிக்கலாம்.

இக்கருத்தாக்கதின் விளைவாக பொருண்மிய மனிதன் சுயமாக இயங்குபவனாக முனைப்புபெற்றதைக் காணலாம். சுய இன்பம் துாய்த்தல் போன்று, ஒழுக்கப்பண்பாடு கொண்டுள்ள சூழலையே, பொது நலனையோ பேணாததன்மை உருவானது. முதலாளித்துவம் வரலாற்று மட்டத்தில் பொருண்மியச் செயற்பாடாக நவீனகாலத்தில் முனைப்புப்பெற்றது. அதன் மெய்யியல் அடித்தளம் - ஒழுக்க வரையறை - அதன் போக்கு என்பன டெக்காட்டின் "நான் சிந்திக்கிறேன் ஆகவே இருக்கிறேன்" என்ற ஐயுறவான கேள்வியின் பின்னணியில் அமைந்துள்ளது. இந்தகேள்வியோடுதான் நவீனத்துவம் முனைப்புற்றது. வில் டுரான்ட் இப்போக்கை இவ்வாறு வர்ணிக்கிறார்: "ரோஜர் பேக்கனுடன் (1424) விழிப்பு ஏற்பட்டது. அது ரெனாடோவில் (1452-1519) எல்லைகளற்றதாக வளர்ச்சிகண்டது. வானசாஸ்திரத்தில் கொப்பர்னிக்கஸ் (1473-1543) கலிலீயோ (1564-1642) இருவருடனும், கில்பேட்டின் (1544-1603) காந்தபுல மின்னியல் ஆய்வுடனும், கார்வியின் (1578-1657) இரத்தவோட்டத்தின் கண்டுபிடிப்புடனும் முழுமையடைந்தது." அறிவு வளரவளர பயம் குறைந்துடன் தெரியாத ஒன்றை வணங்கும் பண்பு குறைந்து இயற்கையை மேற்கொள்ளும்தன்மை வளர்ந்தது. புதிய உணர்வு தளைகளை உடைத்து புதிய நம்பிக்கையை எழுச்சியுறச்செய்தது. மனிதன் செய்யக்கூடியதற்கு எவ்வித கட்டுப்பாடும் இருக்கவில்லை. பிரஞ்சு புரட்சியினால் உருவான பகுத்தறிவுவாத சிந்தனைகள் புதிய உலகக் கண்ணோட்டத்திற்கு வழிவகுத்தன. இதனைக் குறியீட்டு நிகழ்வாக பிரஞ்சுப் புரட்சியின்போது நொர்ட்டடாம் பேராலயத்தில் கிறிஸ்துவின் சுருபத்தை இறக்கி உண்மையின் சுருபத்தை வைத்ததை சுட்டிக்காட்டலாம்.

## எதிர் நவீனத்துவம்

திருச்சபையின் ஏகாதிபத்திய கருத்துமுறையிலிருந்து விடுபட்ட நவீனத்துவத்தின் அறைகூவல் முதன்முதலில் திருச்சபையின் எதிர்வாதத்ததை சந்தித்தது. வுல்பாட் பானன்பேர்க் இவ்வாறு குறிப்பிடுகின்றார்: “கெகல் நவீன உலகம் என்பது உலகமயமான கிறிஸ்தவ சுதந்திரத்தின் நிறைவெனக் கொண்டார். இது 16ம் 17ம் நூற்றாண்டு காலச்சிந்தனையாகும். பின் விவிலிய அடிப்படைவாதிகள் தோன்றினர். குறிப்பாக டார்வினின் கூர்ப்புகொள்கைக்கான எதிர்ப்பு அமெரிக்க குடியேற்ற சீர்திருத்த வலதுசாரி சிந்தனையாளரிடம் தொடங்கியது. இவர்கள் வெளியிட்ட துண்டுப்பிரசுரங்களுக்கு ‘அடிப்படை’ எனப் பெயரிட்டனர். நவீனத்துவம் கொண்டு வந்த உலகமயமாக்கல் சிறப்பாக இஸ்லாமிய அடிப்படைவாதிகளிடம் பலத்த எதிர்ப்பை உருவாக்கியது. நவீனமயமாதல் மனித வாழ்க்கையில், சிறப்பாக மருத்துவத்தில் பல புரட்சிகரமான செயற்பாடுகளை உருவாக்கி பல நலன்களை உருவாக்கியபொழுதிலும், அதனது பராம்பரிய மதிப்பீடுகளை இல்லாமலாக்கும் தன்மை பலத்த எதிர்ப்பைப் பெற்றுள்ளது.

## பூகோளமயமாதலும் பின்நவீனத்துவமும்

இந்த நுற்றாண்டில் ஆழமாகவும், கராசாரமாகவும் பல மட்டங்களிலும் விவாதிக்கப்படும் இரு கருத்துநிலைகள் பூகோளமயமாதலும் பின்நவீனத்துவமுமாகும். இவை இரண்டும் கலை, இலக்கியம், கல்வி, தொடர்பூடகங்கள், வரலாறு, அரசியல், பொருளாதாரம், அண்டகோளவியல், இறையியல், சமூகவியல், மெய்யியல் போன்ற வாழ்வின் பல துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி, புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்து பலவகைப்பட்ட எதிரொலிகளை எழுப்பியவண்ணம் உள்ளன என்று பேராசிரியர் மரிய சேவியர் “பின்நவீனத்துவம்: அறிமுகக்குறிப்புகள்” என்ற தொடர் உரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளதை அவதானிக்கலாம். பேராசிரியர் குறிப்பிட்டது போல இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் பூகோளமயமாதல், பின்நவீனத்துவம் ஆகிய கருத்தமைவுகள் ஆழமான, காரசாரமான விவாதத்தை உருவாக்கிய போதிலும் மூன்றாவது புத்தாயிரம் ஆண்டில் அதி உயர் முரண்கையாக மாறிவிட்டன. பூகோளமயமாதல் அல்லது பின்நவீனத்துவம் என்னும் கருதாக்கங்கள் பொருண்மிய மனிதன் என்ற சொல் வீச்சத்தில் எழுப்பப்படும் கருத்தியல் கட்டமைப்புக்களேயாகும்.

**Synopsis:**

## Some Notes On Modernity From The Perspective Of The Ideology Of Homo Economicus

The Cartesian dualism polarized human reality into mind and matter. The *Homo Economicus* emerged as an independent existent from Cartesian dualism. This abstraction is the basic to political economics, which leads to more conflicts and war. The modernity that is understood as emancipation from the Church authority was developed into extreme individualism. Tracing the development of the subtle ideology of domination, the Cartesian *cogito ergo* is the ontological foundation of the *Homo Economicus.*

**S. F. Kirupananthan**

துணைநின்ற நூல்கள்:


WOLFHART PANNENBERG, *Christianity in a Secularized World*, New York: The Crossroad Publishing Company, 1989.

HERMAN E. DALY and JOHN COBB, *For Common Good*, Boston: Beacon Press, 1989.

THOMAS C. ODEN, *Two Worlds*, Illinois: Intervarsity Press, 1992.

மரிய சேவியர், நீ., "Post modernism: சில அறிமுகக் குறிப்புகள்", *கலைத்தூது*, யாழ்ப்பாணம்: திருமறைக்கலாமன்றம், 1999.


***

வாழ்க்கையை வாழப்பார்! அல்லது வாழ்க்கையை வார்க்கப்பார்!

– வைரமுத்து

## GLOSSARY – அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| 1) | Abstraction | பிரித்தறிதல், கருத்துப்பொருள் |
| 2) | Absolute certainty | முழு உறுதி |
| 3) | Absolute idea | பரம்பொருட்கருத்து |
| 4) | Adolescence | வளரிளமை, விடலைப்பருவம் |
| 5) | Aestheticism | அழகியல் வாதம் |
| 6) | Appearance | தோற்றநிலை |
| 7) | All - inclusive nature | யாவற்றையும் உட்படுத்தும் இயற்கை |
| 8) | Being | இருப்பு உள்ளது |
| 9) | British emipricists | பிரித்தானிய அனுபவவழி கொள்கையினர் |
| 10) | Cartesian Dualism | பிரஞ்சு நாட்டு இருமைக் கொள்கை |
| 11) | Cause | காரணம் |
| 12) | Cell | உயிரணு |
| 13) | Coherence | இயைபு |
| 14) | Complex ideas | சிக்கலான கருத்துக்கள் |
| 15) | Concrete Monism | பருமையான ஒருமைக் கொள்கை |
| 16) | Copy | பிரதி, விம்பம் |
| 17) | Correspondence theory | ஒற்றுமைக் கொள்கை |
| 18) | Critical naturalism | திறனாய்வு முறையில் எழுந்த இயற்கைவாதம் |
| 19) | Criticism | திறனாய்வு |
| 20) | Custom | மரபு |
| 21) | Divine substance | தெய்வ பொருள் |
| 22) | Enumeration | எண்ணிக்கை |
| 23) | Eternal ideas | நிலைத்த கருத்துக்கள் |
| 24) | Ethics | அறவியல் |
| 25) | Existence | இருப்பு |
| 26) | Freedom of the will | செயலுரிமை |
| 27) | German idealism | ஜேர்மனியர் கருத்து முதற்கொள்கை |
| 28) | Habit | பழக்கம் |
| 29) | Idealism | கருத்துவாதம், கற்பனைவாதம், இலட்சியவாதம் |
| 30) | Infinitive knowledge | எல்லையற்ற அறிவு |
| 31) | Illusion | திரிபுகாட்சி |
| 32) | Images | எண்ண உருக்கள் |
| 33) | Imagination | கற்பனை |
| 34) | Immaterial | சடலமல்லாதது |
| 35) | Innate ideas | உள்ளார்ந்த கருத்துக்கள் |
| 36) | Ideas | எண்ணங்கள், கருத்துக்கள் |
| 37) | Linguistic | மொழிசார்ந்த, மொழியியல் சார்ந்த |
| 38) | Matter | சடப்பொருள் |
| 39) | Memory | நினைவாற்றல் |
| 40) | Metaphysics | அடிப்படைத்தத்துவ, இயல்புலன் கடந்த பொருள் இயல் |
| 41) | Nirvana | பரிநிர்வாண நிலை |
| 42) | Objectivity | புறமெய்மை, புறவாயம் |
| 43) | Perspective | கண்ணோட்டம், சரியான தோற்றம், தகவல் நோக்கு |
| 44) | Presupposition | முற்கோள், முற்கற்பிதம் |
| 45) | Paradox | முரணுரை |
| 46) | Reality | மெய்மை, உள்ளமை, உண்மை |
| 47) | Renaissance | மறுமலர்ச்சி |
| 48) | Subjectivity | அகவயத்தன்மை, அகவயம் |
| 49) | Self – evident truth | தன்னுண்மை நிலை |
| 50) | Tabula rasa | வெற்றேடு, (முன்கருத்தற்ற) குழந்தை உள்ளம் |

# மெய்யியல் நோக்கு

(வருடம் இருமுறை)

| | |
|---|---|
| தொகுப்பாசிரியர்: | **யோ. போல் றொகான்,** L. Ph. (Rome) |
| துணையாசிரியர்: | **சூ. டக்ளஸ் மில்ரன் லோகு,** B. A.(Phil.) (Madurai) |
| விநியோகம்: | **வெ. எமில் எழில்ராஜ்,** (இளங்கலை மாணவன்)<br>**ஜெ. அ. ஜெயரஞ்சன்,** (இளங்கலை மாணவன்) |
| ஆலோசகர்: | **லூயிஸ் பொன்னையா, அ. ம. தி.** L. Ph. (Rome) |
| வெளியீடு, விநியோகம்: | **மெய்யியல்துறை**<br>**சவேரியார் குருத்துவக் கல்லூரி**<br>**கொழும்புத்துறை**<br>**யாழ்ப்பாணம்.** |

# MEI - IYAL NOKKU

(Bi - annual)

| | |
|---|---|
| Editor : | **J. Paul Rohan,** L. Ph. (Rome) |
| Sub - Editor: | **S. Douglas Milton Logu,** B. A. )Phil.) (Madurai) |
| Distributors: | **V. Emil Elilraj,** (Under graduate)<br>**J. A. Jeyaranjan,** (Under graduate) |
| Consultant: | **Louis Ponniah,** O. M. I., L. Ph. (Rome) |

Publishers, Distributors:

**Fuculty of Philosophy**
**Xavier's Seminary**
**Columbuthurai, Jaffna.**


**இலச்சினை விளக்கம்:**

எல்லையில்லா அகிலத்தில்,
எல்லையுள்ள உலகினில்,
சிந்திக்கும் மனிதன்
எழுப்பும் கேள்விகள்
எழுத்து வடிவில்

**Our Logo:**

Boundless Universe
Limited World
Reflecting Man
Raising Questions
In Written Form.

**அட்டையில் உள்ள 'உலகம் உன் கையில்...'**

– பொதுவானதொரு சிந்தனைக்கு உருவும், வரியும் கொடுத்தவர்

– சூ. டக்ளஸ் மில்ரன் லோகு

# மெய்யியல் நோக்கு

அன்புமிக்க வாசகர்களே!

இவ்வெளியீடு பற்றிய உங்கள் கருத்துக்கள், விமர்சனங்களை ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

ஓர் ஆண்டிற்கு இரண்டு இதழ்களாக 'மெய்யியல் நோக்கு' தொடர்ந்தும் வெளிவர உள்ளது.

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 45.

"அறிவாளிகளுக்கும், பிரபுக்களுக்கும் என்றிருந்த மெய்யியலை வீதிகளுக்கும், பாதையோரங்களுக்கும், சந்தைகளுக்கும் கொண்டு வாருங்கள்."

-சோக்கிரட்டீஸ்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

மெய்யியல் நோக்கு
சவேரியார் குருத்துவக்கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

அன்னை அச்சகம், குருநகர், யாழ்ப்பாணம்.